பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 தை 30 வெள்ளிக்கிழமை 12.02.2021 கதிர் 99

**இனி அது ரகசியம் அல்ல!**

சர்வதேச அரசியலில் நிதி உதவி, கடனுதவி இராஜதந்திரம் போல கொவிட் தடுப்பூசி இராஜ தந்திரம் ஒன்றும் கட்டவிழ்வது நமக்குத் தெரிந்ததுதான்.

கொவிட் தடுப்பூசி தயாரிப்பில் உலகில் முன்னணியில் திகழ்வது இந்தியாதான். பக்கம்02

# முஸ்லிம்களை ஏமாற்றிய மஹிந்த!

## ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை என்று பிரதமர் அலுவலகம் அறிவிப்பு



ஜனாஸாக்கள் நல்லடக்கம் விடயத்தில் முஸ்லிம்களைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஏமாற்றியுள்ளார் என்று புத்திஜீவிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்குப் பிரதமர் அனுமதி வழங்கியுள்ளார் என்று வெளியான செய்தி, முழுமையாகவே உண்மைக்குப் புறம்பானது எனப் பிரதமர் அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்று 'த லீடர்' செய்தி வெளியிட்டுள்ளது. 2

## அடக்கம் செய்ய முடியும் என்று பிரதமர் மஹிந்த கூறவில்லை

### ஆளும் கட்சி எம்.பி. கோகிலா கருத்து



கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களை அடக்கம் செய்ய முடியும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எந்த வொரு சந்தர்ப்பத்திலும் தெரிவிக்கவில்லை.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கோகிலா குணவர்தன தெரிவித்தார். 2

## நல்லடக்கம் செய்வது குறித்து நிபுணர் குழுவே தீர்மானிக்கும்

### சபையில் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி தெரிவிப்பு

கொரோனா வைரஸால் மரணிப் பவர்களின் உடல்களை அடக்கம் செய்வது தொடர்பான யோசனை துறைசார் நிபுணர் குழுவிடம் முன் வைக்கப்பட்டுள்ளது எனவும், அது தொடர்பாக அவர்களினாலேயே தீர்மானிக்க முடியும் எனவும் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

அடக்கம் செய்வதற்கு அனுமதியளிக்கப்படும் என்று நேற்று முன் தினம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் கூறியிருந்த நிலையில்,

அது தொடர்பாக, 2



மேலும் நால்வர் மரணம்

## கொரோனாச் சாவு 379 ஆக அதிகரிப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 4 பேர் சாவடைந்துள்ளனர்.

கொழும்பு - 05 ஐச் சேர்ந்த 83 வயது ஆண், கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த 70 வயது பெண், கொழும்பு - 13 ஐச் 2

## ஜனாஸாக்களை அடக்கம் செய்யும் விடயத்தில் பிரதமரின் தீர்மானத்தை அவமதிக்கவேண்டாம்

### நாடாளுமன்றில் ஹக்கீம் சுட்டிக்காட்டு



கொரோனா வைரஸ் தொற்றால் மரணிக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அனுமதிப்பதாகப் பிரதமர் திட்டவட்டமான அறிவிப்பொன்றைச் செய்துள்ள நிலையில், தீர்மானத்தை மீண்டும் நிபுணர் குழுவின் பக்கம் தள்ளுவது பிரதமரை அவமதிக்கும் செயலாகும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான 2

## நேற்றும் 939 பேருக்கு கொரோனா தொற்று

இலங்கையில் நேற்றும் 939 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 73 ஆயிரத்து 133 ஆக அதிகரித்துள்ளது. 2




## இலங்கைக்கு எதிரான புதிய பிரேரணைக்கு இந்தியா கட்டாயம் ஆதரவு வழங்கவேண்டும்

### கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. வலியுறுத்து

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளால் கொண்டுவரப்படும் புதிய பிரேரணைக்கு இந்தியா கட்டாயம் ஆதரவு வழங்க வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் 2



## மன்னாரில் கொரோனாவால் வயோதிப் பெண் உயிரிழப்பு!

### வடக்கில் சாவு 5 ஆக உயர்வு

மன்னாரில் வயோதிபப் பெண் ஒருவர் கொரோனாத் வைரஸ் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளார் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி 2

## யாழில் பஸ் நடத்துநருக்கு கொரோனா!

### வடக்கில் நேற்று 7 பேருக்கு தொற்று

யாழ்.பஸ் நடத்துநர் உட்பட 7 பேருக்கு வடக்கு மாகாணத்தில் நேற்று கொரோனா 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை உட்பட தனது அயல்தேசங்கள் எல்லாவற்றுக்கும் கணிசமான அளவு தடுப்பூசிகளை விரைந்து நேரத்துடனும் – தாராளமாகவும் – வழங்கி இப்பிராந்தியத்தில் தனது மேலாண்மையை கௌரவமாக நிலை நிறுத்திக் கொண்டுள்ளது.

மோடி அரசின் 'கொவிட் தடுப்பூசி இராஜதந்திரம்' குறித்து சர்வதேச அரசியலில் தனி ஆய்வுகளே இப்போது நடத்தப்படுகின்றன. அந்தளவுக்கு கொவிட் தொற்றுப் பின்னடைவுப் பாதிப்பை, சர்வதேச அரசியல் உறவாடலில் தனக்கு சாதகமான அம்சமாக – தந்திரோபாயமாக – மாற்றியிருக்கின்றது – அல்லது அந்த வகையில் கையாள்கின்றது – மோடியின் அரசாங்கம்.

இந்தியா தனது அயல் தேசங்களுக்கு இலவசமாக வழங்கிய (இலங்கைக்கு வழங்கிய 6 லட்சம் டோஸ்கள் உட்பட) தடுப்பூசி ரகம், உலக சுகாதார ஸ்தாபனத்தின் அங்கீகாரம் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இதே சமயம், சீனாவும் சில ரகத் தடுப்பூசிகளை உற்பத்தி செய்து தனது நாட்டில் பயன்படுத்தி வருகின்றது. எனினும், அவற்றுக்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் அங்கீகாரம் கிடைக்கவேயில்லை.

இதற்கிடையில், இந்தியாவின் சர்வதேசத்தைக் கையாளும் கொவிட் தடுப்பூசி இராஜதந்திரத்தைப் பார்த்து, தானும் அந்த வகையில் காய் நகர்த்த முயல்கின்றது சீனா.

தான் வழங்க முன்வந்திருக்கும் ஐந்து லட்சம் டோஸ் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளும்படி கொழும்பை அது வற்புறுத்துவதாக ஒரு தகவல். உலக சுகாதார ஸ்தாபனத்தின் அங்கீகாரம் பெறாத தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறு சீனா கடும் அழுத்தம் கொடுக்கின்றதாம். சீனப் புதுவருடத்துக்கு (இன்றைய தினம்தான் அந்தப் புதுவருடம்) முன்னர் அதைப் பெற்றுக் கொள்ளுமாறு வலியுறுத்தப்பட்ட போதும், நாட்டின் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராய்ச்சி கொரோனாத் தொற்றால் ஆஸ்பத்திரியில் இருப்பதைக் காரணம் காட்டி அந்தக் கோரிக்கைக்கு – வற்புறுத்தலுக்கு – பிரதிபலிப்பைக் காட்டாமல் இழுத்தடித்து வருகின்றதாம் கொழும்பு.

உலக சுகாதார ஸ்தாபனம் அங்கீகரிக்காத தடுப்பூசியை இங்கு பிரயோகித்து, அதனால் சிக்கல்கள் ஏதும் ஏற்பட்டால் தங்கள் தலை உருண்டு விடும் என்ற அச்சத்தில் அதிகாரிகள், சம்பந்தப்பட்ட அரசியல் தலைவர்கள் இந்த விவகாரத்தில் முடிவு எடுக்காமல் நழுவி வந்தனர்.

எனினும், சீன அழுத்தம் அதிகரித்ததால் அந்தத் தடுப்பூசியை நன்கொடையாகப் பெற்று, வடக்கு மக்களுக்கு தென்னிலங்கை அரசு காட்டும் முன்னுரிமைத் தாராளமாக அதனை வெளிப்படுத்தி, வடக்கு மக்கள் மீது அந்தத் தடுப்பூசியைக் 'கட்டியடிக்கும்' திட்டம் ஒன்று கொழும்பில் கட்டவிழ்வதாக மிக நம்பிக்கையான இராஜதந்திர வட்டாரம் ஒன்று தகவல் வெளியிட்டது.

தமிழர்களின் அரசியல் தலைவர்களுக்கு இந்த முன்னெச்சரிக்கைத் தகவல் சமர்ப்பணம்.

★ ★ ★

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனுக்கு வழங்கப்பட்ட விசேட – அதிரடிப் படையினரின் – பாதுகாப்பு, அரசியல் காழ்ப்புணர்ச்சிக் காரணங்களுக்காக விலக்கப்பட்டமையை தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கண்டித்துள்ளனர். சுமந்திரனின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அணியினர் யாரும் தமது கண்டனங்களைத் தெரிவிக்கவில்லை என்று நேற்று இப்பத்தியில் சுட்டிக்காட்டியிருந்தேன்.

ரெலோவைச் சேர்ந்த மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், நேற்று நாடாளுமன்றத்தில் மேற்படி விசேட பாதுகாப்பு வாபஸைக் கடுமையாகக் கண்டித்தும் ஆட்சேபித்தும் உரையாற்றியிருக்கின்றார்.

புளொட் தலைவர் சித்தார்த்தன் எம்.பி. நேற்று சுமந்திரனுக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்து இந்த விடயத்தில் தாங்கள் முழுமையாக சுமந்திரனின் பாதுகாப்பையும் நலனையும் வலியுறுத்தி நிற்கின்றனர் என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

*"காலைக்கதிரின் 'இனி இது இரகசியம் அல்ல' பத்தியில் நாங்கள் யாரும் இதனைக் கண்டிக்கவில்லை என்று குறிப்பிட்டிருந்தார்கள். நீங்கள் இந்த விடயத்தை புத்திபூர்வமாகவும், திறமையாகவும் கையாளக் கூடியவர் என்று நாம் நினைக்கிறோம். அதனால்தான் நாம் தொலைபேசி அழைப்பு எடுத்து எதுவும் சொல்லவில்லை. இவ்விடயத்தில் எங்கள் முழுமையான உறுதிப்பாடு உங்களோடுதான்"* – என்று சுமந்திரனுக்குத் தெரிவித்திருக்கின்றார் சித்தார்த்தன் எம்.பி. என அறியவந்தது.

இத்தகைய கனவான் அரசியல் பண்பியல்பு தாராளமாக உள்ளவர் சித்தார்த்தன். அதனால்தான் முன்னைய தலைமைகளினால் பெயர் 'ரிப்பேர்' ஆன புளொட்டை, பெயரை நேர்சீராக்கி, இவ்வளவு தூரம் வெற்றிகரமாக அவரால் நடத்திச் செல்ல முடிகின்றது.

சரி. சுமந்திரனின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சிகள் இரண்டும் – ரெலோவும் புளொட்டும் – இவ்விடயத்தில் தமது பொறுப்பை – கடமையை – ஓரிரு தினங்கள் பிந்தியாவது செய்துள்ளன.

சுமந்திரனின் கட்சியான தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தோரும் அதன் தலைவர் மாவை சேனாதிராசாவும் என்ன செய்யப் போகின்றனர்? 'மௌனம் சம்மதம்' என்பது போல சுமந்தினின் பாதுகாப்பு விலக்கப் பட்டமையை மௌனம் மூலம் தொடர்ந்து அங்கீகரித்து நிற்கப் போகின்றார்களா? பார்ப்போம்...!

– மின்னல் –

## நல்லடக்கம் செய்வது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று எதிர்க்கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் சபையில் நேற்று இராஜாங்க அமைச்சரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

பிரதமர் கூறியபடி கொரோனாவால் மரணிப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்வது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எப்போது வெளியிடப்படும் என்று முஜிபுர் ரஹ்மான் கேள்வியை முன்வைத்தார்.

இதற்குப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே, குறித்த விடயம் தொடர்பாக சுகாதார அமைச்சால் தனிப்பட்ட ரீதியில் தீர்மானங்களை எடுக்க முடியாது. அதனால் அந்த யோசனை துறைசார் நிபுணர் குழுவிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. அவர்களின் இணக்கப்பாடுகளுக்கமையவே எங்களால் செயற்பட முடியும் என்றார்.

## அடக்கம் செய்ய முடியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உடல்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படும் என்றே பிரதமர் கூறினார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## யாழில் பஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் – கொழும்புத்துறை சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் நடத்துநர் கொரோனா அறிகுறிகளுடன் யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்குச் சென்றபோது அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை, கிளிநொச்சியில் ஒருவருக்கும், வவுனியாவில் இருவருக்கும், மன்னாரில் கர்ப்பிணிப்பெண், ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றும் பெண் உட்பட மூவருக்கும் நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் கூறினார்.

# சஜித் கூட்டுக்குள்ளும் பிடுங்குப்பாடு!



சம்பிக்க ரணவக்கவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியில் உயர் பதவியொன்றை வழங்குவதற்கு அக்கட்சியின் உறுப்பினர்கள் சிலர் போர்க்கொடி தூக்கியுள்ளனர் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஜாதிக ஹெல உறுமய ஊடாக அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்த சம்பிக்க ரணவக்க, ஐக்கிய மக்கள் சக்தியில் இணைவதற்காக ஹெல உறுமயவிலிருந்து விலகினார். பொதுச்செயலாளர் பதவியையும் துறந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் முதலாவது மத்திய செயற்குழுவில் பங்கேற்றிருந்தாலும் அந்தக் கட்சியின் உறுப்புரிமையை சம்பிக்க ரணவக்க இன்னும் பெறவில்லை. அவருக்கு வழங்கப்படவுள்ள பதவி தொடர்பான அறிவிப்பு உறுதியாக வெளியான பின்னரே இணைவார் எனக் கூறப்படுகின்றது.

இந்தநிலையில், சம்பிக்கவுக்கு பிரதித் தலைவர் பதவியை வழங்குவது தொடர்பில் சஜித் அணி பரிசீலித்து வருகின்றது. இதற்கு அக்கட்சியின் உறுப்பினர்கள் சிலர் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். இதனால் தற்போது இழுபறி நிலை தொடர்கின்றது.

அதேவேளை, சம்பிக்க ரணவக்கவால் '43' என்ற அரசியல் இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளமையும் சஜித் தரப்பை கிலிகொள்ள வைத்துள்ளது.

## நேற்றும் 939 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து இதுவரை 66 ஆயிரத்து 211 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 6 ஆயிரத்து 523 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## ஜனாஸாக்களை அடக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லிம்களை அடக்கம் செய்வது தொடர்பான தீர்மானத்தை நிபுணர் குழுவே மேற்கொள்ள வேண்டும் என்று கொரோனாத் தடுப்பு தொடர்பான அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கும் போதே, ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

நாட்டின் இக்கட்டான நிலையில், சிறுபான்மையினர் மற்றும் நல்லிணக்கத்தைப் புரிந்துகொண்டு, ஒரு சிறந்த அரசியல்வாதியால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகவே தான் பிரதமரின் தீர்மானத்தைப் பார்க்கின்றார் எனவும் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாஸாக்களை அடக்கம் செய்யும் விடயத்தில் தீர்க்கமான முடிவொன்றை எடுக்க முடியாத, போலி விஞ்ஞானிகளைக் கொண்ட நிபுணர் குழுவுக்கு இந்த விடயம் மீண்டும் தள்ளப்படுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் தீர்மானமொன்றை மேற்கொள்வதில் பிரதமரை விடச் சிறந்தவர் யார்? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

சுகாதார அமைச்சில் உள்ள நிபுணர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் நாட்டில் தேவையற்ற இன ரீதியான பதற்றங்களை ஏற்படுத்துகின்றனர் எனவும் ரவூப் ஹக்கீம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## இலங்கைக்கு எதிரான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: –

இம்முறை நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராகப் புதிய பிரேரணையைக் கொண்டுவரவுள்ள நாடுகளுடன் நாம் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றோம். அந்தவகையில் இந்தியாவுடனும் தொடர்ந்து பேசி வருகின்றோம்.

இலங்கைக்கு எதிராக மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளால் கொண்டுவரப்படும் புதிய பிரேரணைக்கு இந்தியா கட்டாயம் ஆதரவு வழங்க வேண்டும்.

இந்தியாவில் ஏராளமான தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள். அவர்களின் உணர்வுகளையும் இந்திய மத்திய அரசு கவனத்தில் கொண்டு செயற்படும் என்றே நாம் நம்புகின்றோம் – என்றார்.

## கொரோனாச் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த 42 வயது பெண் மற்றும் கண்டி – உடத்தலவின்ன பிரதேசத்தைச் சேர்ந்த 64 வயது பெண் ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாவால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 379 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## முஸ்லிம்களை ஏமாற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவது குறித்து தம்மால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே, பிரதமர் அலுவலகத்திலுள்ள சிரேஷ்ட அதிகாரி இவ்வாறு பதிலளித்தார் என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார், நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் எழுப்பிய கேள்விக்கு, ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படும் என்றே பிரதமர் பதிலளித்தார் எனவும் குறித்த அதிகாரி கூறினார்.

அதைவிடுத்து, கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனப் பிரதமர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கருத்து வெளியிடவில்லை எனப் பிரதமர் அலுவலகத்திலுள்ள சிரேஷ்ட அதிகாரி பதிலளித்தார் என்றார் 'த லீடர்' வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் பிரதமர் வெளியிட்ட கருத்தை அடுத்து, அரச தலைவர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள், முஸ்லிம் அரசியல்வாதிகள், சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் தமது வரவேற்பை வெளியிட்டு வந்த பின்னணியிலேயே, பிரதமர் அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரி மேற்படிக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இதையடுத்தே ஜனாஸாக்கள் நல்லடக்கம் விடயத்தில் முஸ்லிம்களைப் பிரதமர் ஏமாற்றியுள்ளார் என்று புத்திஜீவிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

## மன்னாரில் கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

உயிரிழந்த பெண், கொரோனாத் தொற்றுக்கு உள்ளான ஒருவருடன் தொடர்பில் இருந்தவர் என்றும் அவர் கூறினார்.

சிலாவத்துறையைச் சேர்ந்த 91 வயதுடைய குறித்த பெண், வீட்டில் உயிரிழந்துள்ளார்.

அவரின் சடலம் மன்னார் பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டு மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதன்போதே அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டது.

குறித்த பெண்ணின் மரணத்துடன் மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மூன்றாக உயர்ந்துள்ளது. அதேவேளை, வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட உயிரிழப்பு 5 ஆக அதிகரித்துள்ளது.

# தேவையற்ற அமைதியின்மையை நாட்டில் ஏற்படுத்துகின்றது அரசு!



## ரவூப் ஹக்கீம் சாடல்

அரசாங்கம் தேவையற்ற விதத்தில், நாட்டுக்குள் அமைதியின்மையை ஏற்படுத்தி வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் குற்றம் சுமத்தியுள்ளார்

கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், பிரதமரால் வெளியிடப்பட்ட கருத்து எப்போது வர்த்தமானியில் அறிவிக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரகுமான் கேள்வியெழுப்பியிருந்தார்.

இதற்கு பதில் வழங்கிய ஆரம்ப சுகாதாரம், தொற்று நோய்கள் மற்றும் கொரோனாக் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, சுகாதார அமைச்சு என்ற விதத்தில் தமக்கு தனிப்பட்ட ரீதியில் தீர்மானங்களை எட்ட முடியாது எனவும், சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப குழுவின் ஊடாகவே தீர்மானங்கள் எட்டப்படும் எனவும் குறிப்பிட்டார்.

தொழில்நுட்ப குழுவின் பரிந்துரைகளுக்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதையடுத்து, ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் சபையின் குறுக்கீட்டு கேள்வி எழுப்பினார்.

நாட்டில் பிரதமர் தீர்மானமொன்றை எட்டி, சபையில் அறிவித்ததன் பின்னர், அதனை மாற்றியமைப்பது சரியானதாக இருக்க முடியுமா என அவர் கேள்வி எழுப்பினார்.

சுகாதார அமைச்சில் யார் இதனை முடக்குவது எனவும் அவர் கேள்வி எழுப்பினார். அத்துடன், அரசாங்கம் தேவையற்ற விதத்தில், நாட்டிற்குள் அமைதியின்மையை ஏற்படுத்தி வருவதாகவும் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இந்த பிரச்சினையை பெரிதாக்க வேண்டாம் எனவும், இது தற்போது ஜெனிவா வரை சென்றுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இந்த மாத இறுதிக்குள் 16 லட்சம் தடுப்பூசிகள்!

## வழங்குவதாக உலக சுகாதார ஸ்தாபனம் உறுதி

இலங்கைக்கு இம்மாத இறுதிக்குள் 16 லட்சம் அஸ்ட்ரா செனெக்கா தடுப்பூசிகள் வழங்கப்படும் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

உலக சுகாதார அமைச்சின் கொவெக்ஸ் வேலைத் திட்டத்தின் கீழ் இந்த தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன.

இலங்கை மக்கள் தொகையில் 20 சதவீதத்தினருக்கு 16 லட்சம் தடுப்பூசிகளை இலவசமாக வழங்குவதற்கு உலக சுகாதார அமைப்பு பங்களிப்பு செய்துள்ளது.

முதலாவது கட்டத்தின் கீழ் வழங்கப்படும் 16 லட்சம் தடுப்பூசிகளுக்கு பின்னர் ஏனையவற்றையும் பெற்றுக்கொடுப்பதற்கு கொவெக்ஸ் நிறுவனம் உடன்பட்டிருப்பதாக உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகத்தின் தெற்காசிய மற்றும் தென்கிழக்காசிய நாடுகளின் விசேட பிரதிநிதி விசேட வைத்தியர் பாலித அபயகோன் தெரிவித்தார்.

# நாட்டில் பரவும் கொரோனா பயங்கரமான ஒன்று அல்ல!



## நீலிகா மலவிகே

இலங்கையில் பரவும் கொரோனா வைரஸ் வகை ஏனைய நாடுகளை விட பாரதூரமானது அல்ல எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஶ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நுண்ணுயிரியல் பேராசிரியர் நீலிகா மலவிகே இதனைத் தெரிவித்துள்ளார்.

ஏனைய நாடுகளில் கொரோனா வைரஸ் பரவும் வேகம் மற்றும் தாக்கத்துடன் ஒப்பிடுகையில் இலங்கையில் பரவும் வைரஸின் நிலை மோசமானது அல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வடக்கு பொதுமக்களுக்கான தடுப்பூசி ஏற்பாடுகள் பூர்த்தி!

## மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

வடக்கு மாகாணத்தில் பொதுமக்களுக்கு தடுப்பூசி போடும் திட்டத்துக்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனவும் தடுப்பூசி கிடைத்தவுடன் உடனடியாக திட்டம் ஆரம்பிக்கப்படும் எனவும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாணத்தில் சுகாதாரப் பணியாயர்களுக்கான தடுப்பூசி போடும் திட்டத்தை நிறைவு செய்துள்ளோம். இதன்படி, 85 வீதமானோருக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

இதேவேளை, பொதுமக்களுக்குத் தடுப்பூசியைப் போடுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை நாம் செய்து வருகின்றோம்.

ஐந்து மாவட்டங்களிலும் அரசாங்க அதிபர்களுடனும், பிரதேச செயலாளர்களுடனும் கலந்துரையாடல்களை நடத்தி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றோம்.

அவர்கள் மூலமாகப் பொதுமக்களில் வயது அடிப்படையில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களின் பெயர் விவரங்களை நாம் பெற்றுள்ளோம்.

மேலும், வட மாகாணத்தில் 118 நிலையங்களில் தடுப்பூசி போடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளோம்.

குறித்த நிலையங்களுக்கு பொதுமக்களை அழைத்துவரும் பணியை பிரதேச சபை உத்தியோகத்தர்களிடம் கேட்டுள்ளோம்.

தடுப்பூசி கிடைத்தவுடனேயே, பொதுமக்களுக்கான தடுப்பூசித் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

இதுவேளை, பெப்ரவரி முதலாம் திகதியில் இருந்து இதுவரை வடக்கு மாகாணத்தில் 71 பேருக்குக் கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

இதன்படி, மன்னாரில் 35 பேருக்கும், கிளிநொச்சியில் 14 பேருக்கும், யாழ்ப்பாணத்தில் 11 பேருக்கும் வவுனியாவில் 10 பேருக்கும் முல்லைத்தீவில் ஒருவருக்கும் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கொரோனாத் தொற்று ஆரம்பமான காலத்திலிருந்து இதுவரை வடக்கு மாகாணத்தில் 882 பேருக்குக் கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இதன்படி, வவுனியாவில் 372 பேருக்கும் யாழ்ப்பாணத்தில் 232 பேருக்கும் மன்னாரில் 217 பேருக்கும் கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், கிளிநொச்சியில் 48 பேருக்கும் முல்லைத்தீவில் 13 பேருக்கும் இவ்வாறு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

# இரண்டு முகக்கவசம் அணிந்தால் கொரோனாவில் அதிக பாதுகாப்பு!

## அமெ.தொற்றுநோய் பிரிவு தகவல்

இரண்டு முகக்கவசங்களை அணிவதன் ஊடாக கொரோனா வைரஸிடம் இருந்து அதிக பாதுகாப்பைப் பெற முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க தொற்று நோய் பிரிவினர் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

சத்திரசிகிச்சை முகக்கவசத்துடன் துணியிலான முகக்கவசமொன்றை அணிவதன் ஊடாக வைரஸிடம் இருந்து 92.5 சதவீத பாதுகாப்பைப் பெற முடியும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பொது இடங்களுக்கு செல்லும் போது 2 வயதுக்கும் அதிகமான அனைவரும் முகக்கவசம் அணிய வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# கொரோனா வைரஸ் பரவும் அச்சம்; மூடப்பட்டது தேர்தல் ஆணையகம்!

இராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல் ஆணைக்குழு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

குறித்த செயலகத்தில் பணியாற்றிவந்த ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கமைய நேற்றும் இன்றும் தேர்தல் ஆணைக்குழு தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# திருமலை நகைக்கடையில் கொள்ளையர் கைவரிசை!

திருகோணமலை வடகரை வீதியில் அமைந்துள்ள நகைக் கடையொன்றில் நகை மற்றும் பணம் கொள்ளை அடித்து செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு 7. 15 மணியளவில் இடம்பெற்றுள்ளது. திருகோணமலை என்.சீ.வீதியில் அமைந்துள்ள நகைக்கடைக்கு வாள்களுடன் வந்த குழுவினர் உட்சென்று பயமுறுத்தி நகை மற்றும் பணத்தைக் கொள்ளையிட்டு கடல் மார்க்கமாக படகில் ஏறிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கொள்ளைச் சம்பவம் தொடர்பில் திருகோணமலை தலைமையக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# குருந்தூரில் மீட்கப்பட்ட சிதைவுகள் அநுராதபுர காலத்துக்கு உரியவை!

## தொல்பொருள் திணைக்களம் தகவல்



முல்லைத்தீவு – தண்ணீரூற்று குருந்தூர் மலையில் மீட்கப்பட்ட தொல்பொருள் சிதைவுகள், அநுராதபுர காலத்திற்குரியவை என தொல்பொருள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த பகுதியில் லிங்கத்தை ஒத்த சின்னங்கள் உள்ளிட்ட சில தொல்பொருள்கள் அடையாளம் காணப்பட்டன.

குருந்தூர் மலையில் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போதே இவை மீட்கப்பட்டன எனத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மனதுங்க குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்தச் சிதைவுகள் அநுராதபுர காலத்திற்குரியதென்றும் அங்கு பௌத்த தூபி காணப்பட்டமைக்கான சான்றுகள் மீட்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பல்வேறு தரப்பினரின் கோரிக்கைக்கு அமைய, கடந்த ஜனவரி மாதம் 18ஆம் திகதி குருந்தூர் மலையில் அகழ்வாராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டது.

இந்த அகழ்வுப் பணிகள் இம்மாத இறுதியில் நிறைவு செய்யப்படும் என தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முல்லைத்தீவு குருந்தூர் மலையில் கண்டெடுக்கப்பட்ட சிவலிங்கத்தை ஒத்த உருவம் பல்லவர் கால எட்டுப்பட்டை (எட்டு முகம்) தாரா லிங்கம் என்பதை வரலாற்று ஆய்வாளர் திருச்செல்வம் உறுதிப்படுத்தியுள்ளார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## விமல் தலைமையில் விபரீதம்

சவாலுக்கு உட்படுத்த முடியாத வலிமையான பலத்தோடு ஆட்சிப் பீடமேறி, அரசமைப்புக்கான இருபதாவது திருத்தத்தை நிறைவேற்றியமை மூலம் தனது அதிகாரப் பிடியை மேலும் வலுப்படுத்திக் கொண்ட கோட்டாபய ராஜபக்ஷவின் அரசின் கோட்டைச் சுவரில் சிறிய விரிசலாகத் தோன்றிய வெடிப்பு, பெரும்பிளவாக உருவெடுக்கும் சாத்தியங்கள் தென்படத் தொடங்கியுள்ளன.

இப்பத்தியில் ஏற்கனவே நாம் சுட்டிக்காட்டியபடி சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டில் இதுவரை காலமும் 'பயர் பிராண்ட்' அரசியல்வாதியான விமல் வீரவன்ஸ ஆரம்பித்திருக்கும் உள்வீட்டுப் புரட்சி, சத்தம் சந்தடியின்றி கூட்டையே சலசலக்க வைத்திருக்கின்றது.

விமல் வீரவன்ஸவைப் பொறுத்தவரை கூட்டுக்குள்ளும் குழப்பம். வீட்டுக்குள்ளும் குழப்பம்.

ஓர் அரசியல்வாதியின் தனிப்பட்ட குடும்ப வாழ்வு குறித்து இப்பத்தியில் பிரஸ்தாபிப்பது பொருத்தமேயற்றது.

எனினும், அமைச்சர் விமல் வீரவன்ஸ இப்போது கூட்டுக்குள் ஏற்படுத்தியுள்ள குழப்பத்தை ஒட்டி சக அமைச்சரான நிமல் லான்ஸா குறிப்பிட்ட விவரத்தை நாம் தவிர்க்க முடியாது.

*"ஆளும் கட்சிக் கூட்டை ஒழுங்குப்படுத்தும் முயற்சியில் இறங்க முன்னர் அமைச்சர் விமல் வீரவன்ஸ தமது வீட்டை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும்"* – என்று அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

விமல் வீரவன்ஸவின் வீட்டுக் குழப்பங்கள் மக்களுக்குத் தெரிந்தவைதான்.

சரியோ, பிழையோ, விமல் வீரவன்ஸ ஜே.வி.பி. பண்ணையில் வளர்ந்தவர். இயல்பாகவே சில இடதுசாரி புரட்சிச் சிந்தனைகளை அரசியலில் கண்டு, கடந்து வந்தவர் அவர்.

அரசில் மூத்த அமைச்சராக இருந்தாலும், ஜனாதிபதி, பிரதமர் என்று இரண்டு ராஜபக்ஷக்களுக்கு மட்டுமல்ல, அவர்களையும் தாண்டி அரசில் பதவிகளில் இருக்கின்ற – பதவிகளில் இல்லாத – எல்லா ராஜபக்ஷக்களுக்கும் 'சலாம்' வைக்கும் அரசியல், இப்படி இடதுசாரிக் கூட்டத்தில் வளர்ந்தவருக்கு சரிபட்டு வராது என்பது புரிந்து கொள்ளத் தக்கதே.

குடும்பமாக – சந்ததியாக – ராஜபக்ஷக்களின் பிடிக்குள் ஆட்சிக் கூட்டும், அரசும், முழு நாடும் முடங்கிக் கிடப்பது விமல் வீரவன்ஸ போன்ற தரப்புக்கு சகிக்க முடியாத பெரும் எரிச்சலைத் தந்திருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

தமது வீட்டுக்குள்ளும் தமது கட்சிக்குள்ளும் சில, பல குழப்பங்களுக்கு ராஜபக்ஷக்களின் தூண்டுதலே காரணம் என்ற விசனமும் விமல் வீரவன்ஸவுக்கு இருப்பதாகக் கூறப்படுகின்றது.

விமலுக்கு மாத்திரமல்லாமல், ஆளும் கட்சிக் கூட்டுக்குள் மேலும் பலருக்கு இந்த அதிருப்தி நீடிப்பது தெரிந்த விடயம்தான்.

அந்தத் தரப்புகள் எல்லாம் இப்போது விமல் வீரவன்ஸவை முன்னிறுத்தி, தாங்கள் பின்னால் அணி வகுத்து, வியூகம் அமைக்க விரும்புகின்றன எனக் கூறப்படுகின்றது.

ஆளும், கட்சிக் கூட்டணியில் இருக்கும் சிறிய பன்னிரண்டு கட்சிகளின் தலைவர்கள் நேற்று விமல் வீரவன்ஸ வீட்டில் கூடி மந்திராலோசனை செய்தமையின் பின்புலம் இதுதான்.

ராஜபக்ஷ ஆட்சிப் பீடத்தின் பிதாமகர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தான். எனினும் வயோதிபம் காரணமாகவும், தமது பதவி நிலை அதிகார எல்லைகள் காரணமாகவும், கூட்டமைப்பை முன்நின்று வழி நடத்தும் பொறுப்பை ஏற்காதவராக – ஏற்க இயலாதவராக – அவர் இருக்கின்றார்.

இலங்கை அரசியலில் வெற்றிகரமாக பழமும் தின்று கொட்டையும் போட்ட சாணக்கியர் அவர். அவர் இத்தகைய விடயங்களை – சர்ச்சைகளை – தாமே கையாள்வார் எனின் சுமுகமாகத் தீர்த்து விடுவார் என்பது திண்ணம்.

ஆனால் பந்து இப்போது அவரது களத்தில் இல்லை. தீர்க்கமான முடிவுகளை எடுக்கும் அதிகாரம் அவர் வசம் இல்லை.

அதனால் அரசுக் கூட்டமைப்புக்குள் விமல் வீரவன்ஸ தலைமையில் உருவாகியுள்ள அதிருப்தி, பெரும் விரிசலாவதற்கு அதிக சாத்தியங்கள் உள்ளன என்கின்றன கொழும்பு அரசியல் வட்டாரங்கள்.

அரசு நிர்வாகப் பிடிக்குள் படைமயப்படுத்தப்படும் போக்குத் தீவிரமடைந்திருப்பதும் விமல் அணியை விசனமடைய வைத்திருக்கின்றது என்று கூறப்படுகின்றது.

இது போன்று அரசுக் கூட்டமைப்புக்குள் ஏற்பட்டு வரும் பல்வேறு விபரீதங்கள் குறித்து அவ்வப்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விடம் தொடர்ந்து முறையீடு செய்து விளக்கமளித்த போதிலும், அச்சிக்கல்கள் தீர்க்கப்படாத நிலைமை நீடித்தமை விமல் தரப்பை பெரும் எரிச்சலுக்குள் ஆழ்த்தியதாகவும் கூறப்படுகின்றது.

அதனால்தான், பொதுஜன பெரமுனவின் தலைமைப் பதவியை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து எடுத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளியுங்கள் என்று எரிச்சலுடன் கூறியிருக்கின்றர் விமல் வீரவன்ஸ.

எது, எப்படியோ விமல் வீரவன்ஸ ஆளும் கூட்டை அதிரவைக்கப் போட்டிருக்கும் பிள்ளையார் சுழி, பெரும் பிரளயத்தை ஏற்படுத்தாது அடங்க மாட்டாது என்றே தோன்றுகின்றது.

# தமிழ் மக்களைப் பயமடையச் செய்வதற்காகவே படைகளையும், பொலிஸையும் அரசு ஏவுகிறது!

## சி.வீ.விக்னேஸ்வரன் காட்டம்



எங்களுடைய மக்களைப் பயமடையச் செய்யவேண்டும் என்பதற்காகவே அரசாங்கம் தங்களுடைய படைகளையும், பொலிஸாரையும் ஏவி, பயங்கரவாதச் சட்டம் ஊடான கைதுகள் இடம்பெறுகின்றன என நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள தமது உறவினர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு, கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் சி.வீ.விக்னேஸ்வரனை, யாழில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று (வியாழக்கிழமை) சந்தித்துக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இதன்போது, சி.வீ.விக்னேஸ்வரன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் –

கிளிநொச்சியில் இருந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஆறு மாதங்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டவர்கள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்றும், அவர்கள் எந்தக் குற்றங்களையும் செய்யவில்லை எனவும், முக்கியமாக தங்களுடன் வீட்டிலேயே இருந்தவர்களைத்தான் ஏதோ குற்றஞ்சாட்டிக் கைதுசெய்துகொண்டு போனார்கள் எனவும் அவர்களின் உறவினர்கள் கூறியிருந்தார்கள்.

இதுதொடர்பாக, பயங்கரவாத விசாரணைப் பிரிவிடம் நான் பேசியிருந்தேன். அவர்கள் கூறும் விடயங்கள் வித்தியாசமானவையாக இருக்கின்றன. கைதுசெய்யப்பட்டவர்கள் புலிகளோடு சம்பந்தப்பட்டவர்கள் என்றும் புலி இயக்கத்தை மீண்டும் தொடங்குவதற்காக அவர்கள் நடவடிக்கையில் இறங்கினர் எனவும் பல குற்றச்சாட்டுக்களைக் கூறியிருந்தார்கள்.

இந்நிலையில், கைதுசெய்யப்பட்டவர்களில் சிலர் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளனர் எனவும், சிலருக்கு கொரோனாத் தொற்று உள்ளமையால் தங்காலைக்கு அனுப்பியுள்ளனர் எனவும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் கூறியுள்ளார்கள்.

ஆனால், இவற்றைப் பார்க்கும் போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. எங்களுடைய மக்களுக்கு கஷ்டங்களை, பிரச்சினைகளை, தொந்தரவுகளைக் கொடுக்கின்றார்கள்.

எங்களுடைய மக்களைப் பயமடையச் செய்யவேண்டும் என்பதற்காகவே இவ்வாறான செயற்பாடுகளை அரசாங்கம் தங்களுடைய படைகளையும், பொலிஸாரையும் ஏவிச் செய்கின்றது என்பது என்னுடைய கருத்தாகும்.

எனவே, இதுதொடர்பாக நாங்கள் வழக்குகள் தாக்கல் செய்யவேண்டிய அவசியம் இருக்கின்றது. எங்களுடைய கட்சிக்கென தமிழ் மக்கள் சார்பிலே நீதிமன்றங்களில் நடவடிக்கை எடுப்பதற்காக சில சட்டத்தரணிகளை ஒன்று சேர்த்து இருக்கின்றோம். அந்த அடிப்படையில் இந்த உறவினர்களை அவர்களிடம் பாரப்படுத்தி சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நாங்கள் இப்போது நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இவ்வாறான பல பிரச்சினைகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் நாங்கள் சட்ட ரீதியாக எவ்வாறு அணுகுவது என ஆராய்ந்து வருகின்றோம். வெகு விரைவில் ஏதாவது ஒரு முடிவுக்கு வரக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என எதிர்பார்க்கின்றேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தமது இன பாதுகாவலரில் நம்பிக்கை இல்லை!

## மஹிந்த தரப்பு கிண்டல்



தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, தமிழ் பாதுகாப்பு பிரிவினர் மீது நம்பிக்கை இல்லை போலத் தனக்குத் தோன்றுகின்றது என ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (வியாழக்கிழமை) உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பு அதிகாரிகளாகவும், பொலிஸ் அதிகாரிகளாகவும் தமிழர்கள் இலங்கையில் கடமையாற்றி வருகின்றனர்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழர்களை பாதுகாப்புக்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெற்றுக்கொள்வதில்லை.

சிங்கள பாதுகாப்பு உத்தியோகத்தர்களைத் தமது பாதுகாப்புக்காகவைத்துக்கொண்டு, தமிழீழ விடுதலைப் புலிகளுக்காக, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

அத்துடன், சிங்கள பாதுகாப்பு உத்தியோகத்தர்களை அருகில் வைத்துக் கொண்டு, தமிழீழ விடுதலைப் புலிகளுக்காகவும், புலம்பெயர் தமிழர்களுக்காகவும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேலை செய்து வருகின்றனர்.

# தாக்குதல் குறித்து விசாரணை அறிக்கையின் பிரதி வேண்டும்

## ஜனாதிபதியிடம் பேராயர் மீண்டும் கோரிக்கை



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள இறுதி விசாரணை அறிக்கையின் பிரதியொன்றை வழங்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

– இவ்வாறு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கோரிக்கை விடுத்தார்.

அத்துடன், குறித்த தாக்குதல்களில் உயிரிழந்த, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அதேவேளை, குறித்த விசாரணை அறிக்கையை நாடாளுமன்றத்தில் முன்வைக்குமாறு எதிரணிகள் கோரிக்கை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# விமலின் சர்ச்சை குறித்து பிரதமருடன் பேசுவோம் கூட்டணியைப் பலவீனப்படுத்த இடமளிக்கமுடியாது!

## அமைச்சர் வாசுதேவ சுட்டிக்காட்டு



அமைச்சர் விமல் வீரவன்ஸ சாதாரணமாகக் கூறிய விடயத்தை சிலர் பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணிக்குள் முரண்பாட்டை தோற்றுவிக்க முயற்சிக்கிறார்கள். இந்த விடயம் தொடர்பாகப் பிரதமருடன் பேசத் தீர்மானித்துள்ளோம். கூட்டணியை பலவீனப்படுத்த ஒருபோதும் இடமளிக்க முடியாது என நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பேச்சு சுதந்திரம் அனைவருக்கும் பொதுவாக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஓர் உயரிய பதவி வழங்கப்பட வேண்டும் என்று கூறிய கருத்து, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை தலைவர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று திரிபுபடுத்தப்பட்டுள்ளது.

அமைச்சர் விமல் வீரவன்ஸ சாதாரணமாகக் கூறிய விடயத்தை ஒரு தரப்பினர் பெரிதுபடுத்தி கூட்டணிக்குள் முரண்பாட்டை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தைத் தோற்றுவிக்க முன்னின்று செயற்பட்டவர்களை விமர்சிப்பதற்கு இடமளிக்க முடியாது. இந்த விடயம் தொடர்பாகப் பிரதமருடன் பேச்சை முன்னெடுக்கவுள்ளோம்.

பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணிக்குள் பல கட்சிகள், சிவில் அமைப்புக்கள் அங்கம் வகிக்கின்றனர். அனைவரது கருத்துக்கும் யோசனைக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். கூட்டணி என்ற நிலையில் மாறுப்பட்ட பல கருத்துக்கள் காணப்படலாம். ஆகவே, கூட்டணியை பலவீனப்படுத்த ஒருபோதும் இடமளிக்க முடியாது. - என்றார்.

## தோணி கவிழ்ந்து மீனவர் சாவு!

கிண்ணியா சுங்கான் குழி குளத்தில் கடந்த புதன்கிழமை மாலை 6.30 மணியளவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளை தோணி கவிழ்ந்ததில் மீனவர் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போன சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது.

நடு ஊற்று சுனாமி குடியேற்றத் திட்டத்தில் வசித்து வந்த 2 மீனவர்கள் கடந்த புதன்கிழமை மாலை சுங்கான் குழிகுளத்துக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

இவ்வாறு காணாமல் போனவர் 77 வயதுடைய நபர் எனத் தெரியவருகிறது.

இருவரும் மீன் பிடித்துக் கொண்டிருந்த வேளை தோணி கவிழ்ந்ததை அடுத்து ஒருவர் நீந்தி கரையை அடைந்து உள்ளார் மற்றவர் காணாமல் போயுள்ளார்.

இதுதொடர்பாகப், பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்கள்.

காணாமற்போன வரை தேடும் பணியில் பொது மக்கள் தொடர்ந்தும் ஈடுபட்டுவந்த நிலையில் உயிரிழந்தவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

## 48 மணித்தியாலத்துக்குள் தீர்வின்றேல் தொடர் பணிப் புறக்கணிப்புக்கு தயார்!

### அரசை எச்சரிக்கும் ரயில்வே தொழிற்சங்கம்

ரயில் சேவையில் நிலவும் குறைபாடுகளுக்கு 48 மணித்தியாலத்துக்குள் அரசாங்கம் தீர்வை வழங்காவிடின் தொடர் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுவோம்.

ரயில்நிலைய பொறுப்பதிகாரிகள் இன்றுமுதல் முதல் சட்டப்படி சேவையில் ஈடுபடுவார்கள். ரயில் நிலையத்தில் மேலதிக சேவையில் ஈடுபடமாட்டார்கள் என ரயில் நிலைய அதிபர் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்தார்.

மருதானையில் உள்ள ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ரயில் சேவையில் 1,000 இற்கும் மேற்பட்ட தொழில் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. வெற்றிடங்களுக்கு சேவையாளர்களை இணைத்துக் கொள்ள ரயில்வே திணைக்களம் இதுவரையில் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

4 ஆயிரம் கனிஷ்ட ஊழியர்களுக்கான வெற்றிடமும் 250 ரயில் நிலைய பொறுப்பதிகாரி சேவையிலும் வெற்றிடம் நிலவுகிறது.

ரயில் போக்குவரத்து சேவையில் சமிக்ஞை காட்டுபவர்களின் சேவையிலும் வெற்றிடம் நிலவுகிறது. சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் சமிக்ஞை காட்டுபவர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கு 6 மாத காலமாக சம்பளம் வழங்காத காரணத்தால் அவர்கள் கடந்த வாரம் முதல் சேவையில் இருந்து விலகியுள்ளார்கள்.

ரயில் நிலையத்தில் மூன்று மொழிகளிலும் அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும் என அரச கரும மொழிகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. ஆனால் சிங்கள மொழியில் மாத்திரமே அறிவித்தல் விடுக்கப்படுகின்றன.

இந்தச் சேவையில் 100 வெற்றிடங்களும், ரயில் நிலைய சுகாதார சேவையாளர் சேவையில் 320 வெற்றிடங்களும் நிலவுகின்றன

ரயில்வே திணைக்களம் நட்டமடையும் திணைக்களம் என்று குறிப்பிட்டு ரயில் சேவையை தனியார் தரப்பினருக்கு வழங்க முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. திணைக்களத்தை அபிவிருத்தி செய்ய நாம் முன்வைத்த திட்டங்களை அரசாங்கம் செயற்படுத்தவில்லை. ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான நிலங்கள் தனியார் தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளன. இதன் பின்னணியில் அரசியல் செல்வாக்கு காணப்படுகின்றது. பொறுப்பதிகாரிகள் சங்கத்தினர் முன்வைத்துள்ள கோரிக்கைகளுக்கு 48 மணித்தியாலத்துக்குள் தீர்வை வழங்காவிடின் தொடர் தொழிற் சங்க போராட்டத்தை முன்னெடுக்க தயாராகுவோம். விரைவாக நிறைவேற்ற கூடிய கோரிக்கைகளையாவது அரசாங்கம் செயற்படுத்த வேண்டும். - என்றார்.

## 6 வயதுச் சிறுமிக்குக் குறிவைப்பு; சிறியதந்தை சந்தேகத்தில் கைது!

மட்டக்களப்பு ஏறாவூர் மிச்சு நகர் பிரதேசத்தில் 6 வயது சிறுமிக்கு முகத்தில் சூடுவைத்த சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட சிறிய தந்தையை எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் கடந்த செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டார்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த தனது மனைவியின் முதல் கணவரது 6 வயது சிறுமியின் முகத்தில் கரண்டியை சூடு ஏற்றி சூடுவைத்த அடையாளங்கள் இருந்த நிலையில் 25 வயதுடைய சிறிய தந்தை யாரை பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்தமையுடன் பாதிக்கப்பட்ட சிறுமியை வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவரை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது அவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.



## 8 கோடி ரூபா கஞ்சா மீட்பு!

அமெரிக்காவில் இருந்து கூரியர் சேவை மூலமாக அனுப்பி வைக்கப்பட்டிருந்த ஐந்து பொதிகளிலிருந்து 8 கோடி ரூபா பெறுமதியுடைய 1,150 கிலோகிராம் கஞ்சாவை சுங்கப் பிரிவினர் மீட்டுள்ளனர்.

சுமார் 5 மாதங்களுக்கு முன்பு, ஐந்து கூரியர் பொதிகள் அமெரிக்காவிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையம் வழியாக இலங்கைக்கு அனுப்பப்பட்டு உரிமையாளர்களுக்கு விநியோகிப்பதற்காக சீதுவவில் அமைந்துள்ள கொழும்பு சரக்கு கிடங்கு வளாகத்தில் வைக்கப்பட்டிருந்தது.

எனினும் கூரியர் பொதிகளை பெற யாரும் வருகை தராதமையால் சந்தேகத்திற்கிடமான சுங்க போதைப்பொருள் பிரிவு அதிகாரிகள், பொதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிகளை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இதன்போது கூரியர் பொதிகளில் உள்ள முகவரிகள் போலியானவை என்பது அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்டது.

அதனால் நேற்றைய தினம் குறித்த ஐந்து கூரியர் பொதிகளையும் திறந்து ஆய்வு செய்ய சுங்க அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

இதன்போதே இந்த கஞ்சா தொகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளையும் சுங்கப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## உள்ளக பிரச்சினைக்கு சர்வதேச அரங்கில் ஒருபோதும் தீர்வுகளைப் பெற முடியாது!

### காணி விவகார அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவிப்பு




சர்வதேச அரங்கில் அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் செயற்பாடுகளை முன்னெடுக்கிறார்கள்.

ஐக்கியநாடுகள் சபையின் உறுப்பு நாடுகள் பல இம்முறை அரசாங்கத்துக்கு ஆதரவாகச் செயற்படும்.

உள்ளக பிரச்சினைக்கு சர்வதேச அரங்கில் ஒருபோதும் தீர்வை பெற்றுக்கொள்ள முடியாது என காணி விவகார அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் இதனைக் கூறிய அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு –

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை.

இதுவரையில் குற்றச்சாட்டுக்கள் எவையும் ஆதாரபூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் இலங்கை விவகாரத்தில் ஒருதலை பட்சமாகவே செயற்படுகிறார். இது ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் அடிப்படை கொள்கைக்கு முரணானது.

இறுதிக்கட்ட யுத்தத்தில் மனித உரிமைமீறல்கள் இடம்பெறவில்லை என்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைபேரவை இதுவரை கவனம் செலுத்தவில்லை.

இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு மாத்திரம் அதிக அக்கறை காட்டப்படுகிறது. இது பொருத்தமற்றதாகும்.

சர்வதேச அரங்கில் அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் வகையில் தமிழ்த் தேசியத் தரப்பினர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களை ஒன்றிணைத்து போராட்டங்களை முன்னெடுத்துள்ளார்கள்.

இவ்வாறான செயற்பாடுகளால் அரசாங்கத்தை பலவீனப்படுத்த முடியாது . இம்முறை இலங்கைக்கு ஆதரவாக ஐக்கிய நாடுகள் சபையின் பலம் கொண்ட நாடுகள் செயற்படும்.

பொதுஜன பெரமுன பல கட்சிகளை உள்ளடக்கி கூட்டணியமைத்துள்ளது. கூட்டணி என்ற ரீதியில் கருத்து முரண்பாடுகள், கருத்து வேறுபாடுகள் காணப்படும்.

இது இயல்பானதொன்றாகும். அமைச்சர் விமல் வீரவன்ஸ கூறிய கருத்துக்கள் தற்போது பலவகையில் பேசப்படுகின்றன. காணப்படும் பிரச்சினைக்குத் தீர்வு காண கூட்டணிக்குள் பேச்சுக்களில் ஈடுபடுகின்றமை சிறப்பானதாகும்.

ஜனாதிபதி தலைமையில் அமைக்கப்பட்டுள்ள அரசாங்கத்தை எக்காரணிகளாலும் பலவீனப்படுத்த முடியாது. பல கருத்து வேறுபாடுகள் காணப்படலாம். ஆனால் அரசாங்கம் என்ற ரீதியில் இணைந்து செயற்படுவோம்.

சுபீட்சமான எதிர்காலக் கொள்கைத் திட்டத்தில் நாட்டு மக்களுக்கு வழங்கியுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமாயின் முரண்பாடற்ற அரசாங்கமாகச் செயற்படுகின்றமை கட்டாயமாகும். - என்றார்.

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கான பயிற்சி வினாத்தாள்**

34 T I

விஞ்ஞானம் I
Science I

R.திலக்ஷன்
BSc. (Natural Science) 077 946 9244
கிளி/ கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்

ஒரு மணித்தியாலம்
One Hour

**அறிவுறுத்தல்கள்:**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **(1), (2), (3), (4)** என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின்
* இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக. அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

1.பின்வருவனவற்றுள் எது ஒரு இருசக்கரைட்டு ஆகும்?
(1) குளுக்கோசு (2) கலக்டோசு (3) மோல்டோசு (4) செலுலோசு

2. பின்வரும் எப்பதார்த்தம் நீருடன் கலக்கும் போது ஒரு பல்லினக்கலவை கிடைக்கும்?
(1) செப்புசல்பேற்று (2) சீனி (3) எதையில் அற்ககோல் (4) கோதுமைமா

3. வெற்றிடத்தினூடாக பயணிக்க கூடியது
(1) X கதிர் (2) ஒலி அலை (3) கழி ஒலி (4) பொறிமுறை அலை

4. ஒளித்தொகுப்பிற்கு அவசியமான காரணிகளில் எக்காரணியை ஆய்வுகூடப்பரிசோதனையின் மூலம் செய்துகாட்டுவது கடினமானது.
(1) ஒளி (2) நீர் (3) பச்சையம் (4) காபனீரொட்சைட்டு

5. பின்வருவனவற்றுள் OA, OB ஒளிக்கற்றைகளை விரிகற்றையாக்குவதற்கு பயன்படுத்தத் தக்கவை எவை?

(1) குழிவுவில்லை , குவிவாடி
(2) குவிவுவில்லை , குழிவாடி
(3) குவிவுவில்லை , குழிவாடி
(4) குவிவுவில்லை , குவிவாடி




6. பொருள் ஒன்றின் வேகம் 2 நிமிடத்தில் $20ms^{-1}$ இல் இருந்து $60ms^{-1}$ ஆக மாறியது எனின் அப்பொருளின் ஆர்முடுகல் யாது?
(1) $20ms^{-2}$ (2) $40ms^{-2}$ (3) $1/3\ ms^{-2}$ (4) $1/2\ ms^{-2}$

7.பின்வரும் இழையங்களில் தொடுப்பிழையம் **அல்லாதது?**
(1) குருதியிழையம் (2) என்பிழையம் (3) தசையிழையம் (4) கசியிழையம்

8. $^{12}_{6}C$ அணு ஒன்றினது திணிவு $1.999x10^{-23}g$ ஆகக் காணப்படின் அணுத்திணிவு அலகின் பெறுமானம் யாது?
(1) $1.999 \times 10^{-23}g/6$ (2) $1.999 \times 10^{-23}g/12$ (3) $1.999 \times 10^{-23}gx12/6$ (4) $1.999 \times 10^{-23}gx\ 6/12$

9. வெப்பகொள்ளளவின் நியம அலகு யாது?
(1) J (2) $JKg^{-1}$ (3) $JK^{-1}$ (4) $JKg^{-1}k^{-1}$

10. $250cm^{-3}$ நீரில் 3g NaCl கரைந்துள்ளது எனின் அக்கரைசலின் அமைப்பை திணிவு/கனவளவு (m/v) பின்னத்தில் சரியானதைக் குறிப்பது?
(1) $1/12gdm^{-3}$ (2) $3gdm^{-3}$ . (3) $6gdm^{-3}$ (4) $12gdm^{-3}$




ஒருங்கிணைப்பு:- துளிர்களின் கே.எஸ்.ரகு

கலைக்கதிர் Kalaikkathir

11. வாயுப்பரிமாற்றத்தை வினைத்திறனாக மேற்கொள்ள சுவாசப்பைகள் கொண்டுள்ள சிறப்பியல்பு அல்லது சிறப்பியல்புகள்
(1) மேற்பரப்பு ஈரலிப்பாக காணப்படல் (2) சிற்றறை அகவணி மெல்லியதாக இருத்தல்
(3) சுவாசப்பை பல சிற்றறைகளாக பிரிக்கப்பட்டிருத்தல் (4) மேற்கூறியயாவும்

12. குறித்தவொரு பங்கீட்டுவலுச்சேர்வை நீரில் பூரணமாக அயனாக்கமடையும். பின்வருவனவற்றுள் அச்சேர்வையாக இருக்க கூடியது,
(1) $NH_4OH+$ (2) HCl (3) $CuSO_4$ (4) $H_2CO_3$

13. இரசாயனதாக்கமொன்றுடன் பொருத்தமான சக்தி வரைபுபொன்று உருவில் தரப்பட்டுள்ளது. இத்தாக்கமானது
(1) புறவெப்பதாக்கம்
(2) அகவெப்பதாக்கம்
(3) தாக்கிகளினதும் விளைவுகளினதும் சக்தி சமனானது
(4) விளைவுகளை விட தாக்கிகளின் சக்தி உயர்வானது




14. கடற்காற்று,தரைக்காற்று ஆகியன உண்டாதல் பற்றி விளக்குவதற்கும் பயன்படுத்தப்படும் சரியான கூற்று அல்லது கூற்றுக்களை தெரிந்தெடுக்க?
A.தரையின் மேற்பரப்பில் உள்ளபொருட்களின் தன்வெப்ப கொள்ளளவு கடல்நீரின் தன்வெப்பகொள்ளளவிலும் குறைந்தது.
B.பகலிலே கடலிலும் பார்க்க தரை கூடிய அளவு வெப்பமாகும்.
C.இரவில் தரையிலும் பார்க்க கடல் விரைவாக குளிர்ச்சியாகும்


(1) A மாத்திரம் (2) B,C ஆகியன மாத்திரம்
(3) A,B ஆகியன மாத்திரம் (4) A.C ஆகியன மாத்திரம்

15. $O_{2(g)}\ H_{2(g)}\ CO_{2(g)}$ ஆகிய கூட்டத்தில் தயாரித்து சேகரித்து இனங்காணப்படுகின்றன. இவற்றில் நீரின் கீழ்முகபெயர்ச்சி மூலம் சேகரிக்க கூடிய வாயுக்கள்
(1) $CO_{2(g)}H_{2(g)}$ (2) $0_{2(g)}H_{2(g)}$ (3) $O_{2(g)}CO_{2(g)}$ (4) $H_{2(g)}CO_{2(g)}O_{2(g)}$

16. ஆபத்தான வேளைகளில் உடலை தயார்ப்படுத்த உதவும் அகஞ்சுரப்பி எது?
(1) பரிவககீழ் (2) அதிரீனல்சுரப்பி (3) சதையி (4) தைரொயிட்டுசுரப்பி

17. தெறிவில் ஒன்றின் படம் கீழே தரப்பட்டுள்ளது.

இங்கு A,B,C யினால் காட்டப்படுவது.





(1) இடைத்தூதுநரம்புகலம், இயக்கநரம்புக்கலம்,புலன்நரம்புகலம்
(2) புலன்நரம்புகலம், இடைத்தூது நரம்புக்கலம், இயக்கநரம்புகலம்
(3) இயக்கநரம்புகலம், இடைத்தூது நரம்புக்கலம்,புலன்நரம்புகலம்
(4) புலன்நரம்புகலம், இயக்கதூதுநரம்புகலம், இடைத்தூதுநரம்புகலம்

18. 1000kg திணிவுடைய வாகனமொன்றிற்கு $10ms^{-2}$ ஆர்முடுகலை ஏற்படுத்துவதற்கு நான்கு மனிதர்களால் சமஅளவு விசை பிரயோகிக்கப்பட்டது எனின், ஒருவர் மூலம் கொடுக்கப்பட்டவிசை
(1) 10000N (2) 2000N (3) 2500N (4) 1000N

19. BBxbbஇனக்கலப்பு செய்த போது F2 சந்ததியில் பல்லினநுகநிலை காணப்படும் பிறப்புரிமை அமைப்பு சதவீதம்
(1) 100 (2) 75 (3) 50 (4) 25

20. சிலதடைகள் இணைக்கப்பட்டுள்ள விதம் உருவில் தரப்பட்டுள்ளது. அவற்றில் சமவலுத் தடைகள் அதிகரித்துசெல்லும் ஒழுங்குமுறையே




(1) A,B,C (2) B,C,A (3) B,A,C (4) A,C,B


31. கூர்ப்பு தொடர்பான முடிவுக்கு வரும் போது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய சான்றுகள் வருமாறு
A – பூகோள விலங்குபரம்பலில் இருந்து பெறப்படும் சான்றுகள்
B – சுவட்டுக்கற்கை மூலம் பெறப்படும் சான்றுகள்
C – உயிரின் உடலில் படிமுறை படிமுறையாக ஏற்படும் மாற்றம்
மேற்படி கூற்றுகளில் உண்மையானவை
(1) Aயும் Bயும் (2) Bயும் Cயும் (3) Aயும் Cயும் (4) A,B,C யாவும்

32. பின்வரும் நிகழ்வுகளில் ஒளி முறிவினால் ஏற்படும் நிகழ்வை தெரிவுசெய்க.
(1) வானவில் தோன்றுதல் (2) பல்விம்பம் தோன்றுதல்
(3) சூரிய அடுப்பில் (4) நீழ்மூழ்கிகப்பல்களில்

33. தனது உடல் மேற்பரப்பில் Lotus (லோட்டஸ்) விளைவு கொண்டுள்ள விலங்கு
(1) யானை (2) தும்பி (3) பல்லி (4) மனிதன்

34. கறுப்புநிற PVC நீர் தாங்கி ஒன்றிற்கு மினுமினுப்புதாள் ஒன்று சுற்றப்பட்டு இருந்தது இதற்கு காரணம்.
(1) கதிர்ப்புவெப்பம் உறிஞ்சப்படல் (2) கதிர்ப்புவெப்பம் தெறிப்படைதல்
(3) கதிர்ப்புவெப்பம் உடன்காவுகை 4) கதிர்ப்புவெப்பம் கடத்தல்

35. இவ் ஒழுங்கமைப்பு அழைக்கப்படுவது,




(1) மின்பகுப்பு
(2) வோல்ற்றுமாணி
(3) மின்கலம்
(4) சேமிப்புகலம்

36. இருவாயியின் முன்முககோடலில் **நடைபெறாத** செயற்பாடு
(1) சந்திக்கு குறுக்கே பெருமளவு காவிகள் இடம்மாறும்.
(2) வறிதாக்கல் பிரதேசத்தின் தடிப்புகுறையும்
(3) சக்தியின் மின்னோட்டம் பாயும்.
(4) சக்தியின் தடுப்பு அழுத்தம் அதிகரிக்கும்.

37. மின்னோட்டம் கொண்டு செல்லும் கடத்தியின் மீது காந்தபுலத்தினால் விசை வழங்கப்படும் தோற்றப்பாட்டை அடிப்படையாக கொண்டு அமைக்கப்பட்ட கருவி எது?
(1) திசைகாட்டி (2) வோல்ற்றுமானி (3) டைனமோ (4) நுணுக்குபன்னி

38. பொலிடேற்றாபுளோரோஎதிலீனின் ஒரு பகுதியத்தின் கட்டமைப்பு



39. நபர் ஒருவரின் உணவு மைல் குறைவதனால்
(1) அவரின் காபன் அடிச்சுவடுகுறையும் (2) அவரின் நீரடிச்சுவடு குறையும்
(3) நுகர்வு தூரம் குறையும் (4) சக்தி நெருக்கடி குறையும்


40. நிலக்கீழ் நீரின் மித மிஞ்சிய நுகர்வால் (Tubewell) ஏற்படும் சூழலியல் பிரச்சினை பின்வருவனவற்றுள் எது?
(1) நிலக்கீழ்நீர் மாசடைதல் (2) நீர்வாழ் உயிரினம் அழிவடைதல்
(3) நீர் உவர்தன்மை அடைதல் (4) நீர்நிலைகள் வற்றிப்போதல்



21. சமவிட்டமுள்ள, லிக்னின் படிவைகொண்ட இழையங்கள் முறையே
(1) புடைக்கலவிழையம், வல்லுருக்கலவிழையம்
(2) புடைக்கலவிழையம், ஒட்டுக்கலவிழையம்
(3) ஒட்டுக்கலவிழையம், வல்லுருக்கலவிழையம்
(4) ஒட்டுக்கலவிழையம், புடைக்கலவிழையம்

22. முகவை ஒன்றினுள் உள்ள சிறிதளவு செப்புசல்பேற்றுகரைசல் உடன் நாகத்துண்டு இடும் போது உமது அவதானம்
(1) கரைசலில் வாயுக்குமிழ் தோன்றும்
(2) கரைசலின் நீலநிறச்செறிவு படிப்படியாக குறையும் செங்கபிலநிற வீழ்படிவு தோன்றுதல்
(3) வெப்பநிலை அதிகரிக்கும், வெண்ணிறவீழ்படிவு தோன்றும்
(4) செப்புவீழ்படிவாகும், நாகசல்பேற்று கரைசல் தோன்றும்.

23. மமேலியா,ஆவேஸ் ஆகியவற்றிற்கு இடையே உள்ள பொது இயல்பை X,Y குறிக்கின்றது. எனின் X,Y ஆக காணமுடியுமான இயல்புகளாவன.
(1) நான்கு இதயவறையும்,வாயில்பற்களும்.
(2) நான்கு இதயவறையும், இளஞ்சூட்டுகுருதி வெப்பமுடையது.
(3) பல்சுரப்பியும், இறக்கையால் மூடப்பட்டதும்.
(4) உரோமங்களால் போர்த்த உடலும், பாரம் குறைந்த என்பும்.




24. சிறிதளவு கறியுப்பினால் மாசுபடுத்தப்பட்ட சீனிமாதிரி ஒன்றை நீரில் கரைத்து 80°C வெப்பநிலையில் உள்ள ஒரு நிரம்பல் கரைசல் தயாரிக்கப்பட்டது. அதிலிருந்து தூயசீனிப்பளிங்குகளை பெற்றுக்கொள்வதற்கு பின்வரும் எம்முறை பின்பற்ற முடியும்.
(1) கரைசலின் வெப்பநிலையை உயர்த்துதல் (2) கரைசலை குளிர்த்துதல்
(3) கரைசலை ஐதாக்குதல் (4) கரைசலை வடிகட்டுதல்

25. 240V, 15W என குறிப்பிடப்பட்ட மின்குமிழ் ஒன்று இரண்டு மணித்தியாலம் தொழிற்படும் போது செலவாகும் மின்சக்தியின் அளவு யாது?
(1) 30J (2) 120J (3) 108kWh (4) 30Wh

26. நியூட்டனின் 1ஆம் விதியை விளக்குவதற்கு உதவும் சந்தர்ப்பங்களாவன.
A - மரத்தில் இருந்து காய் விழுதல்
B – துடுப்பின் மூலம் வலிக்கும் திசைக்கு எதிர்திசையில் படகு செய்தல்.
C – வாகனத்தில் தடுப்பு பிரயோகிக்கும் போது பயணிகள் முன்னோக்கி தள்ளப்படல்
D – வான்பொருட்கள் இயங்கிக் கொண்டிருத்தல்
(1) Aயும் Bயும் (2) Cயும் Dயும் (3) Aயும் Cயும் Dயும் (4) யாவும்

27. தாக்கவீதத்தில் செல்வாக்கு செலுத்தும் காரணி **அல்லாதது**
(1) தாக்கிகளின் தாக்க மேற்பரப்பு (2) தாக்கம் நிகழும் வெப்பநிலை
(3) தாக்கிகளின் செறிவு (4) தாக்கிகளின் கொதிநிலை

28. பின்வருவனவற்றுள் எது ஒரு அயன்பிணைப்பு சேர்வை?
(1) $CO_2$ (2) $CuSo_4$ (3) $NH_3$ (4) $H_2O$

29.

| A | B |
|---|---|
| உடலில் உள்ளகழிவுப்பொருள் அகற்றப்படல் | (a) உறுத்துணர்ச்சி |
| தூண்டலுக்கு துலங்கலை காட்டுவது | (b) போசணை |
| சக்தியையும் பதார்த்தங்களையும் பெற்றுக்கொள்வது | (c) சுவாசம் |
| சக்தி உற்பத்தி செய்யும் செயன்முறை | (d) கழிவகற்றல் |

A இல் தரப்பட்ட கூற்றிற்கு பொருத்தமானதை Bயில் இருந்துதெரிக?
(1) d,a,b,c (2) d,c,b,a (3) c,d,a,b (4) d,a,c,b

30. பின்வருவனவற்றுள் உராய்வை அதிகரிக்கும் சந்தர்ப்பமாக அமைவது.
(1) தொடுகை மேற்பரப்பை ஒப்பமாக்கல் (2) தொடுகைபரப்புகளிற்கு இடையில் மசகெண்ணையிடல்
(3) டயர்களுக்கு தவாளிப்பு இடல் (4) தொடுகையுறும் பரப்புகளிற்கு இடையே குண்டுபொதிகை இடல்

ஈழத்துச் சிதம்பர யாத்திரை 15

# ஈழத்து சிதம்பரத் தலபுராணம்

வே.வரதசுந்தரம்




**இந்தப் பிறப்பா லெனக்குற்ற**
**இன்ப முன்னை யெந்நாளுங்**
**கந்த சந்த மலர்தூவிக்**
**கலச நன்னீர் முழுக்காட்டி**
**வெந்த பிறவி வெப்பொழித்து**
**விரையார் தண்ணந் தாமரைக்கீழ்ப்**
**பொந்திற் பொதிந்த தேனுண்டு**
**செம்மாந்திருக்கும் பேறன்றோ!**

இறையருள், பூசைப்பயன், பிறவிப்பேறு பற்றிய பொருள்பொதிந்த இவ் ஈழத்துச் சிதம்பர புராணப் பாடலை மனமுருகிக் கைகூப்பிப் பாடிய அடியார்கள் திண்ணபுரத் திருத்தல புராணம் பற்றியறிந்து அதன் இனிமை, புலமை, கவிநயம், அதுகூறும் சைவநுண்ணறிவு என்பன கண்டு வியக்கின்றனர். எல்லாவற்றுக்கும் அப்பால் யாழ்ப்பாணத்துக் கவிஞன் இளமுருகனாரின் புராணப்பாடல்களின் பக்திச்சுவையில் கண்ணீர் உகுத்து உள்ளம் உருகிப் போயினர்.

ஈழத்துச் சிதம்பரம் என்று சைவநன்மக்களால் போற்றப்படும் திண்ணபுரத் திருத்தலத்துக்கு ஒரு சிறந்த தல புராணம் உண்டு. அது நவாலியூர் புலவர்மணி சோ. இளமுருகனார் பாடிய சிதம்பரபுராணம் ஆகும். இத் தல புராணம் இத்தலத்தின் வரலாறு, சிறப்பு என்பனவற்றுடன்




அதன் அடியார்களின் மாண்பு, அத்தலத்தின் அற்புதங்களைப் பாடுகின்றமை கேட்டு இங்கு யாத்திரைவந்த சிவனடியார்கள் அத்தலபுராணம் பற்றி மேலும் அறிய அவாவுகின்றனர்.

ஈழத்துச் சிதம்பர தலபுராணத்தை தருமையாதீன 25 ஆவது குருமகாசந்நிதானம் வியந்து கூறுகின்றமையைக் காண்க.

'தமிழகத்துச் சிதம்பரம் போன்று ஈழத்துச் சிதம்பரம் காரைநகர் ஆகும். ஈழத்துச் சிதம்பரம் என்ற பெயருடன் விளங்கிவருவது இங்குள்ள 'திண்ணபுரம்'. இதற்குப் புராணம் இல்லாக் குறையைப் போக்கி ஓர் இனிய தல புராணத்தைப்பாடி முடித்துள்ளார் புலவர்மணி இளமுருகனார் அவர்கள்.

"யாழ்ப்பாணத்துத் தெல்லிப்பழையைச் சார்ந்த சிவானந்தையர் புலியூர்ப் புராணம் பாடித் தில்லைப் பெருமானைப் போற்றியமைபோலவே, புலவர்மணி இளமுருகனார் அவர்கள் ஈழத்துச் சிதம்பர புராணம் பாடித் திண்ணபுரச் சுந்தரேசரை ஏத்தியுள்ளார். யாழ்ப்பாணத்து முற்காலத் தற்கால வரலாறுகளையும் மரபுகளையும் தழுவி இதனைத் தந்துள்ளார்."

ஈழத்துச் சிதம்பர புராணத்தை ஒருகாவியம் என்று பாராட்டுவார் கலாநிதி கைலாசநாதக் குருக்கள். இந்தப் புராணத்தில் உள்ள ஒவ்வொரு கவியும் உருக்கம் தருவதாய் உள்ளன. பா மரபும், உரைமரபும் பேணப்பட்டுள்ளன. ஈழத்துத் தலபுராணங்கள் தக்கணகைலாசபுரம், திருக்கரைசைப் புராணம், கதிர்காம புராணம், திருக்கோணாசல புராணம் எனப்பலவாகும். இவற்றுள் முன்தோன்றியது திருக்கோணேஸ்வரத் தலபுராணமான தக்கன கைலாசபுராணம்.

பாயிரச் சருக்கம், காரைவளச் சருக்கம், திண்ணபுரச் சருக்கம், தவம்புரிசருக்கம், ஐயனார் கோயில் காண் சருக்கம், திருக்கோயில் பாதுகாவலர் சருக்கம், அந்தணர் பூசைபுரி சருக்கம், விழாவயர் சருக்கம் எனப் பத்துச் சருக்கங்களை உடைய இத்தலபுராணத்தில் 806 செய்யுட்கள் உள்ளன. இந்தப் புராணத்தில் பாயிரச் சருக்கத்தில் வரும் விநாயகர் வணக்கப் பாடல் சிந்தனைக்கு உரியது.

**திண்ணமாபுரச் செல்வனின் காதையை**
**வண்ணவண்டமிழ் செய்துவணங்கிட**
**நண்ணுமின்னலைப் போக்கும் விநாயகன்**
**தண்ணந் தாமரைத் தாடலை சூடுவாம்**

இந்தப் பாடலில் உள்ள ஈற்றடியில் விநாயகப் பெருமானின் திருவடிகளைத் தலைமேற் சூடி வணங்குவதைப் பாடுகிறார் 'தாடலைச் சூடுவோம்' எனப்பாடுகிறார்.

இந்தக் கோயிலை உருவாக்கிய சிவமுருகர் திண்ணமாபுரம் ஈழத்துச் சிதம்பரம் ஆகவேண்டுமெனத் துடித்தலை இங்கு காணலாம்.

**தில்லைத் தலமே ஈழத்திற்**
**திண்ண புரமாத் திகழ்ந்திடுக**
**அல்லல் நீக்குங் கூத்தனுடன்**
**அம்மை யீங்கே எழுந்தருள்க**
**செல்வச் சுந்தரே சரெனுஞ்**
**சிவப்பே றடியார் நாப்பியல்க**
**வல்லி சௌந்த ராம்பிகையாள்**
**காக்க வென்று வாழ்த்தினரால்**

இந்தத் தல புராணத்தில் சோமாற்கந்தச் சருக்கம் உண்டு. சோமாஸ்கந்தர் என்ற வடமொழிச் சொல்லைச் சோமற்கந்தர் என்று புலவர் பாடுகிறார். சிவபெருமான் உமையோடும், கந்தனோடும் சேர்ந்து இருப்பதே சோமற்கந்த மூர்த்தம் எனப்படும். திருக்கைலாயத்தில் சரவணப் பொய்கையில் தோன்றிய குழந்தை முருகனைத் தூக்கி, அனைத்துத் தமக்கு நடுவே இருத்தி சிவனாரும் உமையாளும் தேவர்கட்கு அருளிய காட்சி சோமற்கந்த மூர்த்தம். சோமற்கந்த மூர்த்தத்தை வழிபட முத்தி இன்பம் சித்திக்கும் என்பார்.

**சத்தியுமை அருள்வடிவம் சார்சிவமும் அவ்வடிவம்**
**சித்திரவேல் இளமுருகன் இவ்வடிவம் சிந்தித்தால்**
**எத்திசையும் எவ்வுலகும் இயங்கிவரும் மன்னுயிர்க்கு**
**முத்தியின்பம் தந்தருளும் மூர்த்தியென முடிந்திடுமால்.**

சோமற்கந்த வடிவம் அருள்வடிவம். எனவே சரியை ஆகிய நான்கு படிகளிலும் வாழ்ந்து வீடுபேறு பெறவிரும்பும் சிவனடியார்கள் சோமற்கந்த வடிவத்தை வழிபடல் வேண்டும். இதை உணர்த்தும் பாடல் இதோ:

**மலைவளர்ந்த மங்கையொடும் சரவணமுத்து**
**மைந்தரோடும்**
**அலைவளர்ந்த நஞ்சுண்டாரணைந்தவருள் வடிவங்காண்**
**கலைவளர்ந்த தமிழ்நூலார் கருதியுரைந் திடுநான்கின்**
**நிலைவளர்ந்து கதிபெறுவார் நித்தம் வழிபடல்வேண்டும்**

சோமற்கந்த மூர்த்த வடிவ வணக்கமாக அமைந்த பாடலைப் பாருங்கள்.

**அந்தநல் வடிவினில் அமர்ந்தவரான**
**இந்தணி செஞ்சடை யெண்குணன் போற்றி**
**அந்தரி சுந்தரி அம்பிகை போற்றி**
**செந்தமிழ் கூட்டுனுஞ் சேயவன் போற்றி.**

நோயினால், வறுமையால் வருந்தி நிற்கும் மெய்யடியார்களுக்கு தாயை ஒத்த கருணை காட்டி சிவவாழ்வு நல்குமாறு இப்புலவன் திண்ணபுரத்து ஈசனை வேண்டுகிறார்.

இத்தலத்தின் தலபுராணமான ஈழத்துச் சிதம்பர புராணத்தைப் பாடிய புலவர்மணி சோ.இளமுருகனார் நம் மூர்ச் சோமசுந்தரப் புலவரின் மைந்தனாகும். இவர் தமிழ் மரபைப் பேணி இந்தப் புராணத்தைப் பாடியவர். இத்தல புராணத்துக்கு உரையெழுதியவர் இளமுருகனாரின் துணைவி பண்டிதைமணி பரமேசுவரி அம்மையார்.

(தொடரும்...)

## 24 மணித்தியால நேரத்தில் 20 பயணிகள் விமான சேவை!

நேற்று வியாழக்கிழமை காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரப் பகுதிக்குள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 20 பயணிகள் விமான சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவற்றினூடாக 918 பயணிகள் தமக்கான சேவைகளை பெற்றுக்கொண்டுள்ளதாக விமான நிலைய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்த காலகட்டத்தில் 09 விமானங்களினூடாக வெளிநாடுகளிலிருந்து 423 பயணிகள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

அவர்களில் சவுதி அரேபியாவின் தம்மத்தைச் சேர்ந்த 75 பேரும், கட்டாரின் டோஹாவைச் சேர்ந்த 45 பேரும் அடங்குவர்.

விமான நிலையத்தை வந்தடைந்த பயணிகள் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக இலங்கை இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டு உள்ளனர். இதேவேளை இந்த காலகட்டத்தில் 11 விமானங்களினூடாக 495 பயணிகள் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட்டும் உள்ளனர்.

## வடக்கு மாகாணத்தில் 21 பேருக்கு தொற்று!

வடக்கு மாகாணத்தில் மேலும் 21 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்றுமுன்தினம் (புதன்கிழமை) கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் 2 பேர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர் -

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடம், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று முன்தினம் 776 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 21 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஆடைத் தொழிற்சாலை கொரோனா கொத்தணியுடன் தொடர்புடைய 8 பேருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்.

அத்தோடு, உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நுண்கலைத் துறை மாணவர் ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் பதுளையிலிருந்து வருகை தந்து கல்வி பயின்றவர்.

அத்துடன், சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்துப்பட்டுள்ளது. அவர் கொழும்பிலிருந்து வருகை தந்த நிலையில் தானாக முன்வந்து பி.சி.ஆர். மாதிரிகளை வழங்கியவர்.

மன்னார் நானாட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 8 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் 5 பேர் தனியார் வங்கியின் நானாட்டான் கிளை உத்தியோகத்தர்கள்.

அந்த வங்கிக் கிளை உத்தியோகத்தர்களிடம் பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்ட நிலையில் கிளை அலுவலகம் நேற்று முன்தினம் முதல் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

அத்துடன் நானாட்டான் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மூவருக்கும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களுடன் தொடர்புடையோர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் இரண்டு பேர் மன்னார் நகர் பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் கொரோனா வைரஸ் தொற்று அறிகுறிகளுடன் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு சென்ற நிலையில் மாதிரிகள் பெறப்பட்டன என்றும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் கூறினார்.

# நிர்வாக சேவைப் பரீட்சையில் தமிழர்கள் நிராகரிப்பு அரசாங்கத்தின் திட்டமிட்ட இன அழிப்பு அரங்கேற்றம்!

## நாடாளுமன்றில் சார்ள்ஸ் எம்.பி. கடும் காட்டம்

இலங்கை நிர்வாக சேவை பரீட்சையில் சித்தியடைந்த 69 பேரும் சிங்களவர்களாகவே உள்ளனர்.

இதில் ஒரு தமிழர்கூட இல்லை. எனவே இதுவும் ஒரு திட்டமிட்ட இனப் படுகொலைதான் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. சார்ள்ஸ் நிர்மலநாதன் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற கைத்தொழில் அமைச்சின் மாணிக்கக்கல் சட்ட மூலம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்

கடந்த 2017 ஆம் ஆண்டு நடந்த இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்த 47 பேரில் 17 பேர் தமிழ் பேசுவோர் இருந்தனர்.

அதிலும் முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களைப் பெற்றவர்களாக தமிழர்களே இருந்தனர். தற்போதைய அரசின் ஆட்சியில் நடந்த இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்த 69 பேரும் சிங்களவர்கள். ஒரு தமிழர்கூட இதில் இல்லை என்பதைத் தமிழர்களினால் எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்?

2020 ஆம் ஆண்டு தை மாதம் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சை (எஸ்.எல்.ஏ.எஸ்) நடத்தப்பட்டது. இந்தப் பரீட்சையின் முடிவு ஒரு வருட தாமதத்தின் பின்னர் தற்போது வெளியாகியுள்ளது.

இந்தப் பரீட்சையில் 69 பேர் சித்தி பெற்று நேர்முகத்தேர்வுக்கு தெரிவாகியுள்ளனர் .இவர்கள் 69 பேரும் சிங்களவர்கள். ஒரு தமிழ் பேசுபவர்கூட சித்திபெறவில்லை.

இது திட்டமிட்ட இன அழிப்பாகவே நாம் கருதுகிறோம். கணக்காளர் சேவைப் பரீட்சையில் அதிக தமிழர்கள் சித்தி பெற்றுவிட்டார்கள் என்பதற்காக அந்தபரீட்சை



யையே நிறுத்திய நாட்டிலும் ஆட்சியிலும் தான் தமிழர்களாகிய நாம் வாழ்கின்றோம்..
- என்றார்.

## 2 ஆவது கொள்கை உரையாடல் மெய்ந்நிகர் ரீதியாக நிறைவு!

2 ஆவது கொள்கை உரையாடலை மெயந்நிகர் ரீதியாக இலங்கை மற்றும் ஜப்பான் நிறைவு செய்துள்ளன.

இது தொடர்பாக வெளிநாட்டு அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை பின்வருமாறு:

இலங்கை - ஜப்பான் கொள்கை உரையாடலின் இரண்டாவது சுற்று 2021 பெப்ரவரி 10 ஆந் திகதி மெய்ந்நிகர் ரீதியாக இரண்டு வெளிநாட்டு அமைச்சுக்களினதும் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் மட்டத்தில் நடைபெற்றது.

இலங்கை மற்றும் ஜப்பானுக்கு இடையிலான பதிவுசெய்யப்பட்ட அரசியல் மற்றும் கலாசாரத் தொடர்புகளின் உறுதியான அடித்தளத்தை நினைவூட்டி, இரு தரப்பினரும் தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச மட்டங்களிலான கொள்கை முன்னுரிமைகள் தொடர்பாகக் கலந்துரையாடியமையுடன், பரஸ்பர ஆர்வத்தின் பொதுவான குறிக்கோள்களைப் பின்பற்றுவதில் ஒன்றிணைந்து செயற்படுவதற்குத் தீர்மானித்தனர்.

வர்த்தகம், முதலீடு மற்றும் அபிவிருத்திக் கூட்டாண்மை ஆகியவற்றை வலுப்படுத்துவதில் விஷேட கவனம் செலுத்துவதன் மூலம் பொருளாதார ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கான முக்கிய பகுதிகளை இரு தரப்பினரும் மதிப்பாய்வு செய்து குறிப்பிட்டதுடன், பொருத்தமான சமகாலத் துறைகளில் ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்துவதற்கு ஒப்புக்கொண்டனர். இந்து சமுத்திரத்தில் விதிகளின் அடிப்படையிலான கடல் ஒழுங்கின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் அதே வேளையில், இரு தரப்பினரும் கடல்சார் ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர ஆதரவை மேம்படுத்துவதிலான கூட்டு முயற்சிகளைத் தொடருவதற்குத் தீர்மானித்தனர்.

வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே இலங்கைத் தூதுக்குழுவிற்கு தலைமை தாங்கியமையுடன், ஜப்பானியத் தரப்பானது ஜப்பான் வெளிவிவகார சிரேஷ்ட பிரதி அமைச்சர் மொரி டேகோவால் தலைமை தாங்கப்பட்டது.

டோக்கியோவிலுள்ள இலங்கைத் தூதுவர் சஞ்சீவ் குணசேகர, இரு வெளிநாட்டு அமைச்சுக்கள், கொழும்பில் உள்ள ஜப்பான் தூதரகம் மற்றும் இலங்கை வர்த்தகத் திணைக்களம் ஆகியவற்றின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்த கலந்துரையாடலின் போது இணைந்திருந்தனர்.

## பிணைமுறி மோசடி வழக்கு மூவரடங்கிய குழு நியமிக்குக!

### சட்டமா அதிபர் கோரிக்கை



ரவி கருணாநாயக்க, அர்ஜூன மகேந்திரன், அர்ஜூன் அலோசியஸ் மற்றும் மேலும் 8 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ள 2016 மார்ச் பிணைமுறி மோசடி வழக்கு விசாரணைக்காக மூவரடங்கிய நீதிபதி குழாமொன்றை நியமிக்குமாறு சட்டமா அதிபர் பிரதம நீதியரசரிடம் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளார்.

## 66 ஆயிரம் பேர் பூரண குணம்!

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களுள் நேற்று (வியாழக்கிழமை) மேலும் 567 பேர் பூரணமாக குணமடைந்து வீடுதிரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களில் 66 ஆயிரத்து 211 பேர் பூரணமாக குணமடைந்து வீடுதிரும்பியுள்ளனர். இதேவேளை, கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 375 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமைச்சர் சரத்வீரசேகர என்மீது சட்ட நடவடிக்கை எடுக்கட்டும்!

### விக்கி துணிச்சல்

அமைச்சர் சரத் வீரசேகர தன் மீது சட்ட நடவடிக்கை கட்டாயமாக எடுக்கட்டும் எனவும் அவற்றை நீதிமன்றத்திலே சந்திப்போம் எனவும் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான க.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் க.வீ.விக்னேஸ்வரனுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர அன்மையில் தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் வைத்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போதே க.வீ.விக்னேஸ்வரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அவர் சட்ட நடவடிக்கை எடுத்தால் நான் அதை வரவேற்கின்றேன் காரணம் எங்களுடைய பிரச்சினைகளை நாங்கள் வெளியில் கொண்டுவரக்கூடிய ஒரு சந்தர்ப்பம் எங்களுக்கு ஏற்படும்.

ஏன் என்றால் நான் இதுவரையில் எடுத்திருக்கும் அத்தனை நடவடிக்கைகளும் ஜனநாயகத்துக்கு உட்பட்ட நடவடிக்கைகளே. வெறுமனே தாங்கள் நினைத்தமை போன்று எங்களை குற்றம் சாட்ட முடியாது. சட்ட நடவடிக்கை கட்டாயமாக எடுக்கட்டும் நீதிமன்றத்திலே அவற்றை சந்திப்போம் எனத் தெரிவித்துள்ளார்.

## தீனம் ஒரு விவசாயத் தகவல்

### தக்காளி சிபாரிசு செய்யப்பட்ட வர்க்கங்கள்

1.கே.டப்லியு. ஆர். - பழமொன்றின் சராசரி நிறை 50 கி.கி ஆகும். தாழ் மத்திய உயர் பிரதேசங்களுக்கு சிபாரிசு செய்யப்பட்டது. விளைவு 25 தொன்/ஹெக்டேயர்.

2.ரோமா - செடி தக்காளி வர்க்கமாகும். பழமொன்றின் நிறை சராசரி 60 கிராம் வரை இருக்கும். தடிப்பான சுற்றுக் கனியத்தைக் கொண்டது உலர் வலயத்திற்கு மிக உகந்தது.

3.மார்குளோப் - நுனிவளர் வர்க்கம் (கொடி வகை) மலைநாட்டு இடை வலயத்திற்கு மிக உகந்தது. பழமொன்றின் சராசரி நிறை 100 கிராம் கடினமான தோலைக் கொண்டது.

4.ரீ 146 - செடி வகை, பக்றீரியா வாடல் நோய் நெமற்றோட்டு, வைரசு இலைச் சுருளல் நோய் என்பனவற்றிற்கு எதிர்ப்புத்தன்மை கொண்டது.

5.ரீ - 89 / பியான்ஸ் - நுனி வளர் வர்க்கம் (கொடிவகை). பழமொன்றின் சராசரி நிறை 90 - 100 கிராம்களாகும். மலைநாட்டின் இடைவலயத்திற்கு உகந்தது.

6.வினார 2 - இவ் - 1 கலப்பின வர்க்கமாகும். செடியாக வளரும் தன்மை கொண்டது .பழ மொன்றின் சராசரி நிறை 65 கிராம் வரை இருக்கும். தோல் கடினமானதாக இருக்கும்.

7.தரிந்து - வாடலிற்கு சிறந்த எதிர்ப்புத் தன்மையைக் கொண்ட வட்ட வடிவான பழங்கள் உருவாகும். பதனிடுவதற்கு உகந்த தக்காளி வர்க்கமாகும். பழமொன்றின் சராசரி நிறை 43 கிராம்களாகும்.

8.ரஷ்மி - உயர் விளைச்சலைப் பெறக்கூடிய வர்க்கமாகும். செடியாக வளரும்இ நுனி வளரா வர்க்கமாகும். பழங்கள் இளமஞ்சள் சிவப்பு நிறமானவை ஆகும். 185 கிராம் நிறையுடையது. வாடல் நோய்க்கு ஓரளவு எதிர்ப்புத்தன்மை கொண்டது. சராசரி விளைச்சல் ஹெக்டேயரொன்றிற்கு 25 - 28 தொன் வரையாகும்.

9.மஹேசி - கலப்பின வர்க்கம்இ அதிக விளைவைத் தரக்கூடியது. பக்றீரியா வாடலுக்கு எதிர்ப்பைக் கொண்டது. பழங்கள் சிவப்பு நிறமானவை. சராசரி காயின் நிறை 125 கிராம் விளைவு 55 தொன் / ஹெக்டேயர்.

10.திலின= பழமொன்றின் சராசரி நிறை 85 - 95 கிராம்கள் வரையாகும். பழங்கள் செம்மஞ்சள் சிவப்பு நிறமானவை. ஏனைய பெரும்பாலான வர்க்கங்களை விட இதில் விதைகள் குறைவாகவே இருக்கும். விளைவு 40 தொன்/ ஹெக்டேயர்

11.ரவி = அதிக சூழல் வெப்பநிலை உள்ள பிரதேசத்திற்கு உகந்த விசேட வர்க்கமாகும், வாடலிற்கும் ஓரளவு எதிர்ப்புத்தன்மை கொண்டது.விளைவு 50 தொன்/ ஹெக்டேயர்.

12.கே. சி - 01 (K C 1) -செடி வகை. வரண்ட பிரதேசங்களில் காலபோகம் சிறுபோகத்தில் பயிரிட உகந்தது. வெப்பத்தை தாங்கக் கூடியது. பழங்கள் மத்திய பெரிய அளவிலானவை சராசரி காயின் நிறை 55 கிராம். விளைவு 40 தொன்/ ஹெக்டேயர் வட பகுதி விவசாயிகளிடையே பிரபல்யமானது.

13.லங்கா செறி - பக்றீரியா வாடல் நோய்க்கு எதிர்ப்பைக்கொண்டது. சராசரி காயின் நிறை 4 கிராம் விளைவு 17 தொன்/ ஹெக்டேயர்.

டி 245 (T 245) - செடி வகை. மழை நாட்டு இடைவலயத்திற்கு சிபாரிசு செய்யப்பட்டது. பழங்கள் செம்மஞ்சள் - சிவப்பு நிறமானது. மத்திய அளவானது. சராசரி காயின் நிறை 100 கிராம் தடித்த தோலைக் கொண்டது.

பாதியா - கலப்பினம், பக்றீரியா வாடலுக்கும் இலைச் சுருளல் வைரசு நோய்க்கும் எதிர்ப்பைக் கொண்டது. சராசரி காயின் நிறை 85 கிராம். விளைச்சல் 60 தொன்/ ஹெ

ராஜித - 80 கிராம் நிறையுள்ள இவ்வர்க்கத்தின் பழங்கள் செம்மஞ்சள் நிறமானவை ஆகும். செடியாக வளரும். நுனி வளரா வர்க்கமாகும். சராசரி விளைச்சல் ஹெக்டேயரொன்றிற்கு 30 மெற்றிக்தொன் வரையாகும்.

லங்கா சவர் - தெரிவு செய்த வர்க்கம். பக்றீரியா வாடல் நோய்க்கு எதிர்ப்பைக் கொண்டது. காயின் சராசரி நிறை 122ப. விளைச்சல் 29 தொன் / ஹெக்டேயர்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர்
Kalaikkathir

# ஈஸ்டர் தாக்குதல் குற்றச்சாட்டிலிருந்து தப்பினார் ரணில்; மாட்டினார் மைத்திரி

## ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையிலிருந்து தகவல்

இலங்கையில் 2019ஆம் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழு, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது குற்றவியல் குற்றச்சாட்டுக்களை சுமத்துவதற்கான பரிந்துரைகளை தமது அறிக்கையின் ஊடாக முன்வைக்கவில்லை எனத் தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாதுகாப்பு சபை கூட்டங்களில் கலந்து கொள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனக்கு அனுமதி அளிக்கவில்லை என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சி வழங்கியிருந்தார்.

2018ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட அரசமைப்பு குழப்பத்துக்குப் பின்னர், தன்னைப் பாதுகாப்பு சபை கூட்டங்களுக்கு அழைக்கவில்லை எனப் பிரதமர், ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியளித்திருந்தார்.

இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோர் மீதே, குற்றவியல் குற்றச்சாட்டுக்களை சுமத்துமாறு, ஈஸ்டர் தாக்குதல் குறித்து விசாரணைகளை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழு தமது அறிக்கையின் ஊடாக பரிந்துரை செய்துள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காக 2019ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இவ்வாறு நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கை, கடந்த பெப்ரவரி முதலாம் திகதி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

# ஜெனிவாச் சமரை எவ்வாறு எதிர்கொள்வது? மஹாசங்கத்தினருடன் பிரதமர் ஆலோசனை



கொழும்பு, பெப். 11

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக எதிர்வரும் மார்ச் மாதம் தாக்கல் செய்யப்படவுள்ள தீர்மானங்கள் குறித்து கலந்துரையாடும் வகையிலான சந்திப்பொன்று மஹாசங்கத்தினருக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையே நேற்றுப் பிற்பகல் அலரிமாளிகையில் இடம்பெற்றது.

இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் தீர்மானங்கள் அடங்கிய அறிக்கை மற்றும் அது தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மதிப்புமிக்க மஹாசங்கத்தினரின் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

கொரோனாத் தொற்று நிலைமையை வெற்றிகரமாக கட்டுப்படுத்திய உலக நாடுகளுக்கிடையே இலங்கை முன்னணியில் காணப்படுகின்ற நிலையில், எமது நாட்டை இழிவுபடுத்தும் நோக்கில் மிகவும் தவறான கருத்துக்களை உள்ளடக்கி மிக மோசடியான முறையில் இந்த மனித உரிமைகள் திணைக்கள அறிக்கை வடிவமைக்கப்பட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாட்டின் வெற்றிக்கும், இறையாண்மைக்கு தீங்கு விளைவிக்கும் வகையிலான 16 விடயங்களை உள்ளடக்கி ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு வின் ஆணையாளர் இந்த அறிக்கையை சமர்ப்பித்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த வணக்கத்துக்குரிய பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர், இதுபோன்ற தீர்மானமிக்கதொரு தருணத்தில் மரியாதைக்குரிய மஹாசங்கத்தினரின் ஆலோசனை மற்றும் அனுசாசனத்தை பெறுவதற்கு தீர்மானித்தமை குறித்து நான் முதலில் பிரதமர் உள்ளிட்டோருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோன்ற சூழ்நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு எதிரான தீர்மானமொன்றை சமர்ப்பிப்பது பொருத்தமற்றது. அதற்குப் பதிலாக எமது தரப்பு நீதியை எடுத்துரைக்கும் பிரதிவாத அறிக்கையொன்றை மாத்திரம் முன்வைக்க வேண்டும் - என்றார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் நோக்கம் நாட்டைப் பிரிப்பதே எனச் சுட்டிக்காட்டிய பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர், மனிதாபிமான முறையின் கீழ் பயங்கரவாதத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவது போர்க்குற்றம் என்று கூறுவது பாரிய குற்றமாகும் எனவும் தெரிவித்தார்.

இந்தத் தீர்மானத்துக்கு அமைவான நல்லிணக்கம் மிகவும் ஆபத்தானது என்றும், அத்தகைய உடன்பாடு இல்லாமல் நாடாளுமன்றத்தில் தேசபற்று சட்டத்தை நிறைவேற்றுவதற்கு நேரம் ஒதுக்குவது பொருத்தமானது என்றும் அவர்கள் கூறினர்.

இந்தச் சூழ்நிலையை எதிர்கொள்ள பௌத்த நாடுகளுக்கு நமது தேரர்களின் ஊடாக சில தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்றும், அதனூடாக நேர்மறையான பதிலை நாட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இதன்போது தொடர்ந்து கருத்துத் தெரிவித்த வணக்கத்துக்குரிய பெங்கமுவே நாலக தேரர், மனிதாபிமான செயற்பாட்டின் மூலம் பெற்ற சுதந்திரத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றும், சிறிமாவோ பண்டாரநாயக்க மற்றும் லக்ஷ்மன் கதிர்காமர் அவர்கள் பின்பற்றிய வெளியுறவுக் கொள்கைகளை கவனத்தில் கொண்டு நாம் செயற்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஒப்புக்கொண்ட 30 (1) தீர்மானம் நாட்டில் நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தத் தீர்மானத்தின் விளைவாக பொருளாதாரத் தடைகள், பயணத் தடை மற்றும் சர்வதேச நாடுகளின் ஆதரவு கிடைக்காமை போன்ற பல விடயங்கள் தொடர்பில் சிக்கல் நிலை உருவாகக் கூடும் என்று தெரிவித்த அமைச்சர் விமல் வீரவன்ஸ, அந்தத் தீர்மானத்துக்கு எதிராக எமக்கு சார்பாக விளங்கும் நாடுகளின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வது மிகவும் முக்கியமானதாகும் எனவும் தெரிவித்தார்.

வழக்கு விசாரணை செய்து தீர்ப்பு வழங்குவது சாதாரண நடைமுறை என்ற போதிலும் இந்தத் தீர்மானத்துக்கமைய ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் ஒரு தீர்மானங்களை மேற்கொள்வது நியாயமில்லை எனவும், ஆனால், இந்தத் தீர்மானத்துடன் நீதி, சட்டம் மற்றும் நேர்மை ஆகியன நெருங்கக்கூடவில்லை என்றும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இதன்போது வணக்கத்துக்குரிய கிரிந்தே அஸ்ஸஜி தேரர் கருத்துத் தெரிவிக்கையில், இந்த ஆபத்துக்கு குறிப்பிடத்தக்க இரு காரணிகள் பங்களிப்புச் செலுத்துகின்றன. இஸ்லாமிய தீவிரவாதம் மற்றும் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்காமை இறுதியில் அமெரிக்காவின் தேவைகள் நிறைவேற்றப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

அத்துடன், இவ்விடயம் தொடர்பாக நமது நாடு சார்பாக கால அவகாசத்தை கோர வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

கால அவகாசத்துக்கு உடன்படுவதற்கான வாய்ப்பு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது எனச் சுட்டிக்காட்டிய அமைச்சர் விமல் வீரவன்ஸ, எவ்வளவு விளக்கமளித்தாலும் மாறாத நிலைப்பாட்டிலுள்ள நாடுகளினாலேயே இலங்கைக்கு அச்சுறுத்தல் காணப்படுகின்றது எனத் தெரிவித்தார்.

சில நாடுகளின் கொள்கைகள் மாறாது என்றும், எங்களுக்கு ஆதரவாக இருக்கும் நாடுகளை நாம் வெற்றி கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த வணக்கத்துக்குரிய நெதகமுவே விஜய மைத்திரி தேரர் கூறுகையில், இலங்கைக்கு வெளிநாடுகளின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதுடன், தமிழ் புலம்பெயர்ந்தோரின் கருத்துக்கு செயற்படாத தூதரக சேவையை பலப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் இந்தச் சூழ்நிலையை எதிர்கொள்ள முடியும் என்றார்.

மஹாசங்கத்தினரின் ஆலோசனை மற்றும் அனுசாசனத்துக்கு நன்றி தெரிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எவ்வாறான சவால்களுக்கு நாடு முகங்கொடுத்தாலும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் மஹாசங்கத்தினரின் ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு அதற்கேற்பவே நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

# ஆளும் கட்சித் தலைவர்களை அவசரமாகச் சந்தித்த மஹிந்த

## மனக்குமுறலை வெளியிட்ட விமல்



கொழும்பு, பெப். 11

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் அவசர கூட்டம் நேற்று இடம்பெற்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடரை எதிர்கொள்ளும் விதம் குறித்தும் அமைச்சர் விமல் வீரவன்ஸ தொடர்பில் அரசுக்குள் காணப்படுகின்ற கருத்து வேறுபாடுகள் தொடர்பிலும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில், அமைச்சர்களான தினேஷ் குணவர்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ஜீ.எல்.பீரிஸ், வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில மற்றும் திஸ்ஸ விதாரண, ஏ.எல்.எம்.அதாவுல்லா, வீரசுமன வீரசேகர, அசங்க நவரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரை எதிர்கொள்ளும் விதம் தொடர்பில், வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன இதன்போது தெளிவூட்டல்களை வழங்கினார்.

# மஹிந்தவுக்குத் துளியளவு கூட பிரச்சினை ஏற்பட இடமளியோம்

## எல்லே குணவங்ச தேரர் திட்டவட்டம்

கொழும்பு, பெப். 11

சர்வதேச உளவுப்பிரிவுகள் நாட்டுக்குள் செயற்படுகின்றன என்றும், தேசிய சக்திகளுக்குள் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன என்றும் தேசத்தைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் எல்லே குணவங்ச தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தேசிய சக்திகள் இணைந்துதான் இந்த அரசை ஆட்சிக்கு கொண்டுவந்தன. எனவே, மக்கள், அரசு மற்றும் தேசிய வளங்களைப் பாதுகாப்பதற்காக மேற்படி சக்திகள் தொடர்ந்தும் செயற்படும். எனவே, தேசிய அமைப்புக்களுக்குள்ளும் பல பிரச்சினைகளை உருவாக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அதேபோல் அரசியல் கட்சிகளுக்குள் முரண்பாடுகளை ஏற்படுத்துவதற்கும் சூழ்ச்சி நடக்கின்றது. எனவே, விழிப்புடன் இருந்து மதிநுட்பத்துடன் அனைவரும் செயற்படவேண்டும்.

சர்வதேச உளவு அமைப்புக்கள் நாட்டுக்குள் தீவிரமாக செயற்படுகின்றன. கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம், ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடர், தேசிய வளங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டே இவை செயற்படுகின்றன.

அதேவேளை, ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும். எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றாமல், நாட்டுக்காக இணைந்து செயற்பட முன்வரவேண்டும். கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷவை முன்னிலைப்படுத்தி பிரச்சினைகளை உருவாக்குவதற்கும் முயற்சி எடுக்கப்படுகின்றது. நாட்டு மக்கள் மஹிந்த ராஜபக்ஷவை நேசிக்கின்றனர். அவருக்கு துளியளவுகூட பிரச்சினை ஏற்படுத்துவதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். பிரச்சினைகளை உருவாக்குவதற்கு மஹிந்தவைப் பயன்படுத்த வேண்டாம் எனவும் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார்.

# 8 ஆயிரத்து 17 பேருக்கு 10 நாளில் கொரோனா!

இலங்கையில் கடந்த 10 நாள்களில் மாத்திரம் 8 ஆயிரத்து 17 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

இதன்படி கொழும்பு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 269 பேருக்கும், கம்பஹா மாவட்டத்தில் ஆயிரத்து 521 பேருக்கும், களுத்துறை மாவட்டத்தில் ஆயிரத்து 576 பேருக்கும், கண்டி மாவட்டத்தில் 773 பேருக்கும் வைரஸ் பரவியுள்ளது.

அத்துடன், நுவரெலியா மாவட்டத்தில் 73 பேருக்கும், பதுளை மாவட்டத்தில் 713 பேருக்கும் வைரஸ் தொற்றியுள்ளது

# முஸ்லிம் எம்.பிக்கள் இப்போது துள்ளிக் குதிக்கின்றார்கள்!

## அஷாத் சாலி கிண்டல்



இலங்கைக்கு இம்மாத இறுதிக்குள் 16 லட்சம் அஸ்ட்ரா செனெக்கா தடுப்பூசிகள் வழங்கப்படும் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

ஜனாஸா நல்லடக்கத்துக்கு அனுமதி வழங்கப்படும் என்ற பிரதமர் மஹிந்தவின் அறிவிப்பை அடுத்து, 20 இற்கு ஆதரவளித்த எதிரணி முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இப்போது துள்ளிக் குதிக்கத் தொடங்கியுள்ளார்கள் என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் மேல் மாகாண முன்னாள் ஆளுநருமான அஷாத் சாலி தெரிவித்துள்ளார்.

பிரதமரின் ஒரேயொரு சொல்லை பிடித்துக் கொண்டு, அதற்கு கை, கால், முகம் வைத்து, உருவம் அமைத்து, அறிக்கை விட்டு, தம்பட்டம் அடிக்கின்றார்கள் என்று குற்றஞ்சாட்டியுள்ள அவர், 20 இற்கு கை உயர்த்திய இந்த சமூகத் துரோகிகள் இவ்வளவு காலமும் 'மழை காலத்தில் புற்றுக்குள் ஒளித்த பாம்பு' போல் இருந்து விட்டு, இன்று தொடக்கம் படமெடுத்து ஆடத் தொடங்குகிறார்கள் என்றும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

தேர்தல் மேடைகளில் ராஜபக்ஷக்களை மோசமாக விமர்சித்து, மக்கள் மத்தியில் வாக்குகளை சூறையாடி வெற்றி பெற்றார்கள். பின்னர் சமூகத்தின் மீது எந்த அக்கறையும் இல்லாமல், அவர்களின் தலைமைகளுக்கும் கண்ணாமூச்சி விளையாட்டுக் காட்டிவிட்டு, கையை உயர்த்தினார்கள்.

தமது சொந்த நலன்களுக்காகவும் பட்ட கடன்களை அடைப்பதற்காகவுமே, இவர்கள் பெரமுன அரசுக்கு ஆதரவளித்து, கோட்டாவை சர்வவல்லமை பொருந்தியவராக மாற்றினார்கள். இவர்கள் ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்த கேவலம் கெட்டவர்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நசீர் எம்.பியாவதற்கு முன்னரேயே, 'வென்ற பின்னர் அரசுக்கு ஆதரவளிப்போம்' என்று பகிரங்கமாகச் சொன்னவர். கட்சியின் கொள்கைக்கு மாறாக இவர் கருத்துத் தெரிவித்தவர்.

புத்தளத்தில் 'மரத்தில் ஒரு காலையும், மயிலில் மற்றொரு காலையும் வைத்துக்கொண்டு' பொதுச் சின்னத்தின் மூலம் பதவிக்கு வந்த அலி சப்ரி எம்.பி, அடாத்தாகப் பிடித்து பறிபோகவிருந்த தனது கள்ளக் காணிகளைக் காப்பாற்றுவதற்காக, தனது கட்சித் தலைமைக்கும் மாறுபாடு செய்து 20 இற்கு ஆதரவளித்தார். ஏனைய எம்.பிக்கள் அனைவரும் பக்கா டீலர்கள்.

எனவே, சமூகத்துக்கு இவர்கள் எதையாவது செய்ய வேண்டுமென்று உளமார விரும்பினால், அறிக்கைகள் விடுகின்றமையை அவசரமாக நிறுத்த வேண்டும். – இவ்வாறு அவர் தெரிவித்தார்.

---

### கூட்டு ஒப்பந்தம் அகற்றப்படக்கூடாது

# தொழிலாளர் வேலை நாள்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்!

## வே. இராதாகிருஷ்ணன் வலியுறுத்தல்



அரசாங்கத்தின் முறையற்ற வெளிநாட்டு கொள்கைகளால் இந்தியா, ஜப்பான், சீனா உள்ளிட்ட நாடுகளுடன் முரண்பாடுகள் தோன்றியுள்ளன.

மறுபுறம் ஜெனிவா அமர்வுகளின் நிறைவில் இலங்கை மீது எவ்வாறான தடைகள் விதிக்கப்படும் என்று மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நாட்டில் பல முக்கிய பதவிகளில் இராணுவ அதிகாரிகளே காணப்படுகிறார்கள். எனவே, எதிர்காலத்தில் இலங்கையிலும் மியன்மாரில் ஏற்பட்டதைப் போன்ற நிலைமை ஏற்படும் என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

தற்போதைய அரசாங்கத்தின் முறையற்ற வெளிநாட்டு கொள்கைகளால் இந்தியா, ஜப்பான், சீனா உள்ளிட்ட நாடுகளுடன் முரண்பாடுகள் தோன்றியுள்ளன.

மறுபுறம் ஜெனிவா அமர்வுகளின் நிறைவில் இலங்கை மீது எவ்வாறான தடைகள் விதிக்கப்படும் என்று மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது. எனவே இந்தியாவுடனான நட்புறவை பகைத்துக் கொண்டு முன்னோக்கி பயணிக்க முடியாது.

கிழக்கு முனைய விவகாரங்களில் இந்தியாவிடம் சுமுகமான பேச்சுக்களின் மூலம் தீர்மானத்தை அறிவித்திருக்கலாம். மாறாக, திடீரென இவ்வாறு அறிவித்தமையே இந்தியாவுடன் முரண்படக் காரணமாகும்.

இந்தியாவிடமிருந்து எமக்கு பல உதவிகள் கிடைக்கின்றன. இலங்கைக்கு முதன் முதலாக தடுப்பூசிகளை வழங்கியதும் இந்தியாவாகும்.

அதற்காக இந்தியாவிற்கு கிழக்கு முனையத்தை வழங்க வேண்டும் என்று நாம் கூறவில்லை. பேச்சுக்களின் மூலம் சுமூகமான தீர்வு எட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

தற்போது நாட்டில் பல முக்கிய பதவிகளில் இராணுவ அதிகாரிகளே காணப்படுகிறார்கள். எனவே, எதிர்காலத்தில் இலங்கையிலும் மியன்மாரில் ஏற்பட்டதைப் போன்ற நிலைமை ஏற்படும் என்ற அச்சம் உருவாகியுள்ளது.– என்றார்.

இதன் போது பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரம் தொடர்பில் கருத்து தெரிவித்த அவர்–

அரசாங்கம் அல்லது முதலாளிமார் சம்மேளனம் தோட்டத் தொழிலாளர்களுக்கு 25 நாள்கள் சம்பளம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். சம்பளத்தை அதிகரித்து வேலை நாள்களை குறைப்பது அல்லது அவர்களுக்கு அழுத்தம் பிரயோகிப்பது பொருத்தமற்றது.

அத்தோடு தொழிலாளர்களின் நலன் சார்ந்த விடயங்களில் முக்கிய பங்கு வகிக்கின்ற கூட்டு ஒப்பந்தம் எந்த சந்தர்ப்பத்திலும் அகற்றப்பட்டு விடக்கூடாது.

அதில் கூறப்பட்டுள்ள தொழிலாளர் நலன்சார் விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் முன்னின்று செயற்பட வேண்டும். வேலை நாள்கள் குறைக்கப்பட மாட்டா என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கூறுகின்ற போதிலும் அது உறுதிப்படுத்தப்படவில்லை.

நாட்டில் தற்போது காணப்படுகின்ற அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பினடிப்படையில் வேலை நாள்களைக் குறைத்தால் தொழிலாளர்கள் பாதிப்படைவார்கள்.– என்றார்.

---

# தானாகவே வினையை அரசு தேடிக்கொண்டது!

## எதிர்க்கட்சி உறுப்பினர் ஹேஷா விதானகே கிண்டல்

கொழும்பு, பெப்.12

ஜெனிவா உள்ளிட்ட சர்வதேச அரங்கில் இலங்கை நெருக்கடிகளுக்கு முகங்கொடுப்பதை நாமும் விரும்பவில்லை.

ஆனால் இராணுவத்தினரை உயர் அதிகாரங்களில் பதவியில் அமர்த்துதல், மஹர சிறைச்சாலை சம்பவம் உள்ளிட்டவற்றால் இந்த அரசாங்கம் தானகவே நெருக்கடியை தேடிக் கொண்டது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

கொரோனா விவகாரங்கள் தொடர்பில் போலியான தகவல்கள் கூறப்படுகின்றன. தொற்று முழுமையாக குணமடைய முன்னர் தொற்றாளர்கள் வீடுகளுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

இவ்வாறான பிரச்சினைகளை மறைப்பதற்கு விமல் வீரவன்ஸ – சாகர காரியவசம் ஊடாக போலியான நாடகங்கள் அரங்கேற்றப்படுகின்றன.

சர்வதேசத்தின் மத்தியில் இந்த நாடகங்கள் செல்லுபடியாகா. சீனாவின் நட்பு நாடான பாகிஸ்தான் பிரதமர் இலங்கை வந்து நாடாளுமன்றத்தில் உரையாற்றவுள்ளார் எனக் கூறப்படுகிறது.



இவ்வாறான செயற்பாடுகள் மூலம் சீனாவின் நிபந்தனைகளுக்கு அமைய இந்தியாவை புறந்தள்ள அரசாங்கம் முயற்சிக்கிறதா?

உயிர்த்த ஞாயிறுதாக்குதல் தொடர்பான ஆணைக்குழுவின் மூலமும் போலி நாடகங்கள் அரங்கேற்றப்படுகின்றன. இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டதன் நோக்கம் நியாயமானதென்றால் அதனுடன் தொடர்புடைய அனைவரையும் எவ்வித பேதமும் இன்றி சட்டத்தின் முன் நிறுத்துமாறு வலியுறுத்துகின்றோம்.

ஜெனிவா உள்ளிட்ட சர்வதேச அரங்கில் இலங்கை நெருக்கடிகளுக்கு முகங்கொடுப்பதை நாமும் விரும்பவில்லை. ஆனால் இராணுவத்தினரை உயர் அதிகாரங்களில் பதவியில் அமர்த்துதல், மஹர சிறைச்சாலை சம்பவம் உள்ளிட்டவற்றால் இந்த அரசாங்கம் தானாகவே நெருக்கடியை தேடிக் கொண்டது. – என்றார்.

---

# காட்டு யானைகளின் தொல்லை; விளாங்குள மக்கள் கவலை!

பலவகையான உதவித்திட்டங்களின் மூலமாக விவசாயத்துக்கான ஊக்குவிப்புக்கள் கிடைக்கப்பெறுகின்ற போதிலும் காட்டு யானைகளின் தொல்லை காரணமாக தாம் பெரிதும் மதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர் என விளாங்குளப் பகுதி வாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

1964 ஆம் ஆண்டிலிருந்து தாம் இந்தப் பகுதியில் வாழ்ந்துவருகின்ற போதிலும் தமக்கு முறையான காணி ஆவணங்கள் இன்னமும் வழங்கப்படவில்லை எனவும் இதனால் தமது காணிகள் வன திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டுவிடும் எனும் அச்சத்தில் தாம் வாழ்ந்துவருகின்றனர் எனவும் கவலை தெரிவித்தனர்.

நிலைபேறான வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் பயிரிடப்பட்ட உழுந்து அறுவடை நிகழ்வு கப்பல்துறை மற்றும் விளாங்குளம் ஆகிய பகுதிகளில் நடைபெற்றது.

இதன் போது பங்கேற்ற பொதுமக்கள் தமது கிராமத்தில் உள்ள பிரச்சினைகளை அரச அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

இந் நிகழ்வில் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் ஏ.அருள்ராஜ் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு அங்கு அறுவடை நிகழ்வில் பங்கேற்றதோடு குறித்த கிராமத்தில் உள்ள குறை நிறைகள் பிரதேச செயலாளரிடம் எடுத்துக்கூறப்பட்டது.



அகம் மனிதவழ மேம்பாட்டு நிலையத்தினால் வழங்கப்பட்ட உதவிகளின் மூலமாக கிழக்கில் மொத்தமாக 150 பயனாளிகளுக்கு 80 இற்கும் மேற்பட்ட ஏக்கர்களிலே பலவகையான சிறு தானியப் பயிர்ச்செய்கைகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த திட்டத்தின் கீழ் பெறப்பட்ட உதவிகளின் மூலமாக பயிரிடப்பட்டவற்றைக்கூட காட்டுயானைகள் அழித்து சேதப்படுத்தியுள்ளன எனக் கிராம வாசிகள் பிரதேச செயலாளரிடம் முறையிட்டனர்.

# ஜனாஸா அடக்க விவகாரம்; எவரும் உரிமை கோர முடியாது!

ஜனாஸாக்களை அடக்கம் செய்யும் விடயத்தில் எவரும் உரிமை கோர முடியாது . கடந்த காலங்களில் இடங்களை அடையாளப்படுத்தி தருமாறு அரசாங்கம் கேட்டிருந்ததுடன் திட்டமிட்டபடி அரசாங்கம் ஜனாஸாவை அடக்கம் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தமையைக் காணமுடியும் என உலமா கட்சி தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் அமைந்துள்ள உலமாகட்சி அலுவலகத்தில் நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பு நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற போது அதில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

நாடாளுமன்றத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கருத்தொன்றை முன்வைத்துள்ளார். அதாவது கொரோனாவால் பாதிக்கப்பட்டு மரணமடைந்த ஜனாஸாக்களை (மரண உடல்கள்) அடக்கம் செய்யவும் முடியும் எனக் கூறியுள்ளார்.

இந்தக் கருத்தை முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், பலரும் இதனை தீர்வாக பார்க்கின்றார்கள். அந்தவகையில் உலமா கட்சியினராகிய நாங்கள் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஒரு பங்காளி கட்சியாக இருக்கின்ற வேளையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இக்கருத்து ஆறுதலையும் மனநிம்மதியையும் தருகின்றது.

ஏனெனின் ஜனாஸா எரிப்பை முஸ்லிம் சமூகம் முற்றிலும் விரும்பாத செயலாக நாம் கண்டிருக்கின்றோம். கடந்த ஏப்ரல் மாதம் முதல் ஜனாஸா எரிப்பைத் தவிர்த்து நல்லடக்கம் செய்வதற்கு அனுமதிக்கும்படி கேட்டு வருகின்றோம். இதனடிப்படையில் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவிடமும் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தோம். அதே போன்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பஸில் ராஜபக்ஷ, பவித்ரா வன்னியராச்சி ஆகியோரிடம் நேரடியாக வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

இதனை முழு முஸ்லிம் சமூகமும் எதிர்பார்த்திருந்தது. அந்த வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாஸாக்களை அடக்கம் செய்ய முடியும் எனத் தெரிவித்திருக்கின்றமை பாராட்டத்தக்க விடயம். அத்துடன் இந்த விடயம் தொடர்பில் வர்த்தமானி அறிவிப்பை அரசு மேற்கொள்ள வேண்டும். மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டபாயவின் அரசாங்கம் வெளிநாட்டு சக்திகளுக்கோ அல்லது ஏனைய தரப்பினருக்கோ அடிபணியாதவர்கள்.

அந்த வகையில் ஜனாஸா விடயம் தொடர்பில் தாம் அழுத்தம் கொடுத்திருந்தார்கள் என சிலர் வாதிட்டு கொண்டிருக்கின்றார்கள். இன்னும் சிலர் தமது பேரணி மூலம் தான் நடைபெற்றதாகக் கூறுகின்றனர். ஆனால் ஜனாதிபதி பல மாதங்களுக்கு முன்னர் ஜனாஸாக்களை எரிக்காமல் அடக்க முடியும் என்பதை ஏற்றுக் கொண்டிருந்தார்.

இது தவிர பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடந்த



முபாறக் அப்துல் மஜீத்

காலங்களில் நல்லடக்கத்துக்காக இடங்களை அடையாளப்படுத்தி தருமாறு கேட்டிருந்தார். எனவே திட்டமிட்டபடி அரசாங்கம் ஜனாஸாவை அடக்கம் செய்வதற் கான முயற்சிகளை மேற்கொண்டிருந்ததை காணமுடி யும்.

ஆனால், இந்த விடயத்தை பிறகாரணிகள் தடுத்திருந்தமையால் இவ்வாறு நீண்ட தூரம் இப்பிரச்சினை எடுத்துச்செல்லப்பட்டிருந்தது. எனவே உரிமை கோருவதை நிறுத்தி அரசாங்கத்தை பலப்படுத்த அனைவரும் முன்வர வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றேன். - எனத் தெரிவித்துள்ளார்.

## 78 வயது மூதாட்டியை துஷ்பிரயோகம் செய்து கொலை செய்துள்ளார் 28 வயது இளைஞன்!

கேகாலை, ஜன.12

கேகாலை தேவாலேகம வீடொன்றினுள் கூரையை பிரிந்து இறங்கிய நபரொருவர் 78 வயதுடைய வயோதிப பெண் ஒருவரை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய கொலை செய்துள்ளார்.

கொலையைப் புரிந்த சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர் அண்மையில் சிறையில் இருந்து விடுதலையான 28 வயதுடைய இளைஞன் எனத் தெரியவந்துள்ளது.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் சிறைச்சாலையில் இருந்து விடுதலையாகி வீட்டில் சுயதனிமைப்படுத்தலில் இருந்த நபரொருவரே இவ்வாறுகைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு உயிரிழந்த பெண் தனிமையில் இருந்துள்ள நிலையில், வீட்டின் கூரையை பிரித்துக் கொண்டு அவர் நுழைந்துள்ளார்.


பின்னர் குறித்த பெண்ணின் தங்க நகைகள் மற்றும் பணத்தை திருடியுள்ளார் எனவும், பின்பு குறித்த பெண்ணை நிர்வாணப்படுத்தி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ள நிலையில் அந்தப் பெண் உயிரிழந்திருக்கலாம். அல்லது கொலை செய்யப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கேகாலை பிரதான நீதிவான் ஷாலிகா நவரத்ன சம்பவ இடத்திற்கு சென்று நீதிவான் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நிலையில், கேகாலை பொலிஸின் குற்றவியல் விசாரணை பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நாடாளுமன்ற ஆசன விவகாரம்: ரஞ்சனுக்கு தற்காலிக சலுகை!

ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற ஆசன இடம் தொடர்பில் மார்ச் 16 ஆம் திகதி வரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டாம் என்று நாடாளுமன்ற பொதுச் செயலாளருக்கு மேல் முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.



சிறைவாசம் காரணமாக தனது நாடாளுமன்ற ஆசனத்தை நீக்குவதைத் தடுக்க இடைக்கால தடை உத்தரவு கோரி ரஞ்சன் ராமநாயக்க தாக்கல் செய்த மனு நேற்று மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே இந்த உத்தரவை மேல் முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் குழுவினர் பிறப்பித்தனர்.

இந்த உத்தரவால் மார்ச் 16 ஆம் திகதி வரை நாடாளுமன்றில் ரஞ்சன் ராமநாயக்கவின் உறுப்புரிமை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

## பஸ் சாரதியாகினார் பிள்ளையான் எம்.பி.!

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு இணைத் தலைவரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் மாயவட்டை பேரில்லாவெளி எனும் இடத்தில் மாவெட்டுவான் அணைக்கட்டுக்கு அடிக்கல் நாட்ட கடந்த செவ்வாய்க்கிழமை சென்ற போது, அந்த நிகழ்வுக்கு சமுகமளிக்க வந்த அரச உத்தியோகஸ்தர்கள்மற்றும்மாணவர்களை ஏற்றி வந்த பஸ்ஸின் சாரதி 45 நிமிடமாக பாதை சரியின்மை காரணமாக பஸ்ஸை இடைநடுவில் நிறுத்தி வைத்திருந்தார்.

இதனை அவதானித்த நாடாளுமன்ற உறுப்பினர் சி. சந்திரகாந்தன் ,அந்த சாரதியிடம் ஏன் வாகனத்தை நிறுத்தி வைத்துள்ளீர்கள் எனக்கேட்டபோது அதற்கு அவர் ‘இந்த பாதை சரி இல்லை இந்த அலுவலர்கள் எல்லோரும் அடிக்கல் நடும் நிகழ்ச்சிக்குச் செல்ல வேண்டும் என்ன செய்வது என்று எனக்கு தெரியவில்லை. - என்றார்.

இதனை செவிமடுத்த நாடாளுமன்ற உறுப்பினர் சி. சந்திரகாந்தன் ‘நான் மிகவும் பாதுகாப்பாக அவர்களை அந்த இடம் சேர்ப்பேன் ஏறுங்கள்’ எனக்கூறி அவர் பஸ் சாரதியாக மாறினார். அனைவரையும் குறித்த இடம் வரை பாதுகாப்பாக கொண்டு சேர்த்தார். நாடாளுமன்ற உறுப்பினரின் முன்மாதிரியை மக்கள் பெரிதும் பாராட்டினர்.

## மயிலத்தமடு – மாதவனை மேய்ச்சல் தரை அபகரிப்பு மனு விசாரணை ஒத்திவைப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத் தமடு, மாதவனை பகுதியில் மேய்ச்சல் தரை அபகரிப்பு தொடர்பாக தாக்கல் செய் யப்பட்ட மனு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைப் பகுதியில் அத்துமீறிய அபகரிப்புத் தொடர்பான வழக்கு நேற்று கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே எதிர்வரும் 26ஆம் திகதி வரை வழக்கு விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பிரதிவாதிகள் சார்பில் ஒருவர் மாத்திரமே நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த நிலையிலேயே, வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத் துக்கொள்ளப்பட்டபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம் (ஜனா), த.கலையரசன் ஆகியோரும் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

## சட்டவிரோத ஆயுத களஞ்சியசாலை கட்டான, மிரிஸ்வத்த பகுதியில் மீட்பு!

கட்டான, மிரிஸ்வத்த பகுதியில் சட்டவிரோத ஆயுத களஞ்சியசாலை ஒன்றை பொலிஸ் விடே அதிரடிப்படையினர் சுற்றிவளைத்துள்ளனர்.

இதன்போது 8 ஆயுதங்கள் மற்றும் 1,171 தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் நபர் ஒருவரும் கைது செய் யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.02.2021 இல் வெளியிடப்பெற்றது.